ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்



திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் ஊஞ்சல் சேவை

ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் எல்லாக் குணங்களையும் அவஸ்தைகளையும் கடந்து விளங்குகிறார். அவர் அவற்றால் பாதிக்கப்படவில்லை; அவைகள் அவரைப் பாதிக்கவும் முடியாது. ஆனால், பக்தர்கள் அந்த ஒப்பற்ற பரம்பொருளைத் தங்கள் உள்ளத்திலேயே உணர்ந்து அனுபவிக்கிறார்கள். ஆகையால் பக்தர்கள், ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் எப்போதும் உற்சாகமாகவும் சந்தோஷமாகவும் கவலையற்றும் இருந்து, தங்களுக்கு எல்லா விதமான சௌகரியங்களையும் சௌபாக்கியங்களையும் க்ஷேமங்களையும் கொடுத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

இதுதான் திருமலையில் கண்ணாடி ஹால் எனப்படும் அயன மஹாலில் நாள்தோறும் நடத்தப்படும் ஊஞ்சல் சேவையின் தாத்பரியமாகும். இந்தச் சேவை ஒவ்வொரு நாளும் மாலையில் ஆறு மணிக்குப் பிறகு நடந்து வருகிறது. உற்சவமூர்த்தி அழகாக அலங்கரிக்கப் பெற்ற ஊஞ்சலில் தம் தேவிமார்களுடன் எழுந்தருளுகிறார். கந்தம், சாமர உபசாரங்கள், வேதபாராயணம், பஜனை ஆகியவற்றுடன் ஸ்வாமி லேசாக ஊஞ்சல் ஆடுகிறார்.

மேற்கண்ட ஊஞ்சல் சேவை உற்சவத்தில் பங்குகொள்ள விரும்பும் கிருகஸ்தர்கள் ரூ. 1000 செலுத்தித் தங்கள் குடும்பத்தில் ஆறு பேர்களுடன் இந்த உற்சவத்தில் கலந்துகொள்ளலாம். அவ்விதம் உற்சவத்தில் பங்குகொள்ளும் கிருகஸ்தருக்கு ரூ. 250 பெறுமானமுள்ள தங்க டாலரும் வஸ்திர வெகுமதியும் அளிக்கப்படும்.

எக்ஸிக்யுட்டிவ் ஆபீசர்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

தொகுதி 61 | டிசம்பர்—1981 | இதழ் 12

பொருளடக்கம்

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை.
—திருமூலர்

தொகுதி 61	துர்மதி ஆடு மார்கழி மீ	இதழ் 12



பிரார்த்தனை

कौसल्यासुप्रजा राम पूर्वा सन्ध्या प्रवर्तते ।
उत्तिष्ठ नरशार्दूल कर्तव्यं दैवमाह्निकम् ॥
उत्तिष्ठोत्तिष्ठ गोविन्द, उत्तिष्ठ गरुडध्वज ।
उत्तिष्ठ कमलाकान्त त्रैलोक्यं मङ्गलं कुरु ॥

मातः समस्तजगतां मधुकैटभारे-
वक्षोविहारिणि मनोहर-दिव्यमूर्ते ।
श्रीस्वामिनि श्रितजन-प्रिय-दानशीले
श्रीवेङ्कटेशदयिते तव सुप्रभातम् ॥

கௌஸல்யா-ஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே।
உத்திஷ்ட்ட நரசார்தூல கர்த்தவ்யம் தைவமாஹ்நிகம்॥
உத்திஷ்ட்ட-உத்திஷ்ட்ட கோவிந்த, உத்திஷ்ட்ட கருடத்வஜ।
உத்திஷ்ட்ட கமலாகாந்த த்ரைலோக்யம் மங்களம் குரு॥
மாதஸ் ஸமஸ்த-ஜகதாம் மதுகைடபாரே:
வக்ஷோ-விஹாரிணி மநோஹர-திவ்ய-மூர்த்தே।
ஸ்ரீஸ்வாமிநி ச்ரிதஜந-ப்ரியதாந-சீலே
ஸ்ரீவேங்கடேச-தயிதே தவ ஸுப்ரபாதம்॥

கோசலைதன் மணிவயிறு வாய்த்த ராமா! காலைச்சந்தி தொடங்குகிறது. எழுந்திரு. தெய்விகமான பகற்கடமையைத் தொடங்கிச் செய்ய வேண்டும். எழுந்திரு எழுந்திரு, கோவிந்தா! எழுந்திரு கருடக் கொடியுடையவனே! எழுந்திரு கமலைமணாளனே! எழுந்து மூவுலகிற்கும் நன்மை செய்.

எல்லா உலகிற்கும் தாயே! மதுகைடபரின் பகைவனான திருமாலின் மார்பில் விளங்கும் திருவே! எழில்வாய்ந்த தெய்விக மூர்த்தமே! செல்வமளிக்கும் தலைவியே! புகலடைந்தோர் வேண்டுவதைக் கொடுக்கும் தன்மையளே! திருவேங்கடவனின் அன்புக்கு உரியவளே! உனக்கு நற்காலை ஆகுக.

மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும் இவ்
வையந் தன்னொடும் கூடுவ தில்லையான்
ஐயனே! அரங்கா! என்ற ழைக்கின்றேன்
மையல் கொண்டொழிந்தேன் என்றன் மாலுக்கே. —பெருமாள் திருமொழி



ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருள் வாக்கு

ஞாயிறு, மார்ச் 11, 1883

இன்று பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் ஜயந்தி நாளாகும். அவரது சீடர்களும் நெருங்கிய பக்தர்களுமான பலர் தட்சிணேசுவரத்துக் காளி கோவிலில் இருந்த ஸ்ரீ குருதேவரின் அறையில் அந்தப் புனிதமான நாளைக் கொண்டாட விரும்பினர்.

அதிகாலையிலிருந்தே பக்தர்கள் ஒவ்வொருவராகத் தட்சிணேசுவரம் வரத் துவங்கினர். பவதாரிணி கோவிலில் மங்கள ஆரதி முடிவு பெற்றது. அதைத் தொடர்ந்து அந்த விடியற்காலையில் பாணர் மண்டபத்திலிருந்து இனிய சங்கீதம் ஒலிக்க ஆரம்பித்தது. அது வசந்த காலம். எனவே அப்போது மரங்களும் செடிகொடிகளும் புத்தம்புதிய இலைகளோடும் மலர்களோடும் பூத்துக் குலுங்கின. சூழ இருந்த காற்றும் ஆனந்தத்தைச் சுமந்து நின்றது போல் தோன்றிற்று. பகவான் ஸ்ரீராமகிருஷ்ண ஜயந்தி நாள் என்பதனால், பக்தர்களின் இதயங்களில் அந்த மங்கள நாளில் ஆனந்தப் பூரிப்பு இருந்தது.

ம— அதிகாலையிலேயே குருதேவரின் அறைக்கு வந்து சேர்ந்தார். அப்போது அவர் தமக்கு முன்னதாகவே அங்கே பவநாத், ராக்கால், பவநாத்தின் நண்பரான காளிகிருஷ்ணர் ஆகியோர் வந்திருந்ததை கவனித்தார். அவர்களுடன் பரமஹம்சதேவர் கிழக்குத் தாழ்வாரத்தில் அமர்ந்து புன்முறுவல் தவழ உரையாடிக்கொண்டிருந்தார். அங்கு வந்த ம— குருதேவரின் முன்பு சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் (ம—விடம்): நீ வந்திருக்கிறாயா? நீ வந்ததுபற்றி எனக்கு மகிழ்ச்சி.

(பக்தர்களை நோக்கி): வெட்கம், பொறுமை, பயம் இந்த மூன்றும் ஒருவனிடம் இருக்கும் வரை அவன் ஞானம் பெற இயலாது. இன்று எவ்வளவோ ஆனந்தம் பெருகியோடும். ஆனால் ஹரிநாமம் ஓதுவதில் பித்தேறி, ஆடவும் பாடவும் இயலாத மூடர்களுக்கு ஒரு நாளும் கடவுள் தரிசனம் கிட்டாது. பகவானது நாமங்களைப் பாடுவதற்கு ஏன் வெட்கமோ பயமோ கொள்ள வேண்டும்? இப்பொழுது நீங்கள் எல்லோரும் பாடுங்கள்.

பவநாத்தும் அவரது நண்பர் காளிகிருஷ்ணரும் சேர்ந்து பாடினார்கள்.

குருதேவர் கூப்பிய கரங்களுடன் அமர்ந்து முழுமனதுடன் பாட்டைக் கேட்டுக்கொண்டிருந்தார். பாட்டைக் கேட்கக் கேட்க அவருடைய மனம் ஒரேயடியாக ஏதோ ஒரு தெய்விக உலகில் ஆழ்ந்துவிட்டது. அவரது மனம் உலர்ந்த நெருப்புக் குச்சி போன்றது. ஒரே ஒரு தடவை உரைத்தால் அதில் ஞானத்தீப் பற்றி எரிய ஆரம்பித்துவிடும். சாதாரண மக்களின் மனமோ ஈரத் தீக்குச்சியைப் போன்றது. எவ்வளவு உரைத்தாலும் அதில் நெருப்புப் பற்றவே பற்றாது. காரணம், அவர்களின் மனம் லௌகிக ஆசைகளில் மூழ்கியிருக்கிறது.

குருதேவர் நீண்ட நேரம் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். சிறிது நேரம் சென்றபின்,

பவநாத்தின் காதில் காளிகிருஷ்ணர் ஏதோ மெதுவாகக் கூறினர். பின்பு அவர் குருதேவ ரின் முன்பு சாஷ்டாங்கமாகப் பணிந்து எழுந் தார். ஸ்ரீராமகிருஷ்ணர் வியப்புடன், ''நீ எங்கே போகிருய்?'' என்று காளிகிருஷ் ணரைக் கேட்டார்.

பவநாத்: அவனுக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது. அதனுல் அவன் போகிருன்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: என்ன வேலையாகப் போகிருன்?

பவநாத்: அவன் பாராநகரில் உள்ள தொழிலாளர் ஸ்தாபனத்திற்குப் போக வேண்டும். (காளிகிருஷ்ணர் புறப்பட்டுவிட் டார்.)

ஸ்ரீராமகிருஷ்ணர்: அவன் இங்கு இல்லா ததை அவனது துரதிருஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். இன்று இங்கு ஹரிநாமம் பாடுவதில் எவ்வளவு ஆனந்தம் பெருகி யோடப்போகிறது, பார்! ஆனுல் அதை அனுபவிக்க அவன் கொடுத்து வைக்கவில்லை. அவன் தலையெழுத்து அப்படி.

ஸ்ரீராமகிருஷ்ணருக்கு உடல்நலம் நன்ருக இல்லை. எனவே இன்று அவர் கங்கையில் குளிப்பதற்குச் செல்லவில்லை. நேரம் சுமார் எட்டரை அல்லது ஒன்பது மணி இருக்கும். அப்போது குருதேவரின் அறைக்குக் கீழே யுள்ள தாழ்வாரத்தில் கங்கைநீரைச் சில குடங்களில் கொண்டு வந்து வைத்தார்கள். குருதேவர் குளித்தார். பக்தர்கள் சிலர் அவர் நீராடுவதற்கு உதவி செய்தனர். குளித்துக் கொண்டே குருதேவர், ''ஒரு செம்பு நீரைத் தனியாக வையுங்கள்'' என்று பணித்தார். கடைசியில் அந்தச் செம்பு நீரைத் தமது தலையில் ஊற்றிக்கொண்டார். இன்று அவர் உடல்நலத்தைக் குறித்து மிகவும் எச்சரிக்கை யுடன் இருந்தார். ஒரு செம்புத் தண்ணீருக்கு அதிகமாக இன்று அவர் தலையில் ஊற்றிக் கொள்ளவில்லை.

நீராடியபிறகு குருதேவர் தமது இனிய குரலில் பகவானது நாமங்களை ஓதிக் கொண்டே ஒரு புதிய ஆடையை அணிந்து கொண்டார். இரண்டொரு சீடர்கள் உடன் செல்ல, அவர் தென்புறமாகச் சென்று, முற்றத்தின் வழியாகக் காளிகோவிலை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அப் போது இடைவிடாமல் அவர் ஜகன்மாதா வின் திருநாமத்தை ஜபித்துக் கொண்டிருந் தார். அவரது கண்களில் மனம் அகமுகப் பட்டிருக்கும் பார்வை இருந்தது. அது அடைகாக்கும்போது உள்ள ஒரு பறவையின் பார்வையை ஒத்திருந்தது.

காளிதேவியின் ஆலயத்தினுள் சென்று, குருதேவர் தேவியின் திருவுருவத்தை வணங்கிவிட்டுப் பின்பு தேவியைப் பூஜித் தார். ஆனுல் அவர் பூஜைக்கு உரிய கிரியை களையோ நியமங்களையோ அறவே பின்பற்ற வில்லை. ஒரு சமயம் அவர் காளிதேவியின் திருவடிகளில் மலரையும் சந்தனத்தையும் இட்டார்; மறுசமயம் அவற்றைத் தமது தலைமீது இட்டுக்கொண்டார். கடைசியாக அவர், காளிதேவிக்கு அர்ப்பித்திருந்த மலர்களைத் தம் தலையில் வைத்துக்கொண்டு பவநாத்திடம், ''இங்குள்ள இளநீரை எடுத்துக்கொள். இது தேவியின் பிரசாதம்'' என்று சொன்னுர்.

மறுபடியும் முற்றத்தின் வழியாக, குரு தேவர் தமது அறைக்குத் திரும்பினர். ம—வும் பவநாத்தும் அவருடன் சென்றனர். பவநாத் கையில் இளநீருடன் வந்தார். வழியில் ஸ்ரீராதாகாந்தரின் கோவில் இருந் தது. ஸ்ரீகுருதேவர் அந்தக் கோவிலை விஷ்ணு கோவில் என்று அழைப்பது வழக்கம். அவர் அந்தக் கோவிலுக்குச் சென்று ராதை கிருஷ்ணன் இருவருடைய திருவுரு வங்களையும் தரிசித்துவிட்டுத் தரையில் வீழ்ந்து வணங்கினர். இடப்புறத்தில் பன் னிரண்டு சிவாலயங்கள் இருந்தன. அவற்றை நோக்கி, சிவபெருமானை நினைத்தும் ஸ்ரீராம கிருஷ்ணர் வணங்கினர்.

இவை அனைத்தையும் முடித்துக்கொண்டு ஸ்ரீராமகிருஷ்ணதேவர் தமது அறைக்குத் திரும்பியதும், அங்கே பல பக்தர்கள் வந் திருந்ததைக் கண்டார். அவர்களுள் ராம்,

நித்தியகோபால், கேதார் சட்டர்ஜி ஆகிய மூவரும் இருந்தனர். அவர்கள் அனைவரும் பரமஹம்சரைக் கண்டதும் அவருக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தனர். ஸ்ரீராமகிருஷ்ணர் அவர்களை அன்புடன் வரவேற்று அவர்களின் நலன்களைக் குறித்து விசாரித்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர், ''நீ ஏதாவது சாப்பிடுகிருயா?'' என்று நித்தியகோபாலிடம் கேட்டார். குழந்தையின் இயல்பு படைத்த நித்தியகோபால், ''ஆம், நான் சாப்பிடுகிறேன்'' என்ருர். அவர் பேசுவது ஒரு குழந்தை பேசுவது போலவே இருந்தது. இருபத்துமூன்று அல்லது இருபத்துநான்கு வயதாகியிருந்த அவருக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. அவர் எப்பொழுதும் மிகவும் உயர்ந்த ஆன்மிக நிலையில் இருந்து வந்தார். சில சமயங்களில் தனியாகவும் மற்றும் சில சமயங்களில் ராம் என்ற அன்பருடன் சேர்ந்தும் நித்தியகோபால் அடிக்கடி ஸ்ரீராமகிருஷ்ணரைத் தரிசிக்க வருவது வழக்கம். நித்தியகோபாலின் மிகவும் உயர்ந்த ஆன்மிக நிலையைக் கண்டு ஸ்ரீகுருதேவர் அவரைப் பெரிதும் நேசித்தார். ''நித்தியகோபால் பரமஹம்ச நிலையை எய்தியவன்'' என்று குருதேவரே அடிக்கடி தெரிவித்திருக்கிருர். நித்தியகோபாலை அவர் பிருந்தாவன கோபாலன் என்றே கருதி வந்தார்.

நித்தியகோபால் சாப்பிட்டு முடித்தார். அதன்பின் குருதேவர் அவரைக் கங்கையை நோக்கியிருந்த தமது அறையின் அரைவட்டத் தாழ்வாரத்திற்கு அழைத்துச் சென்று அவருடன் பேச ஆரம்பித்தார்.

ஒரு பெண் பரம பக்தை; அவளுக்குச் சுமார் முப்பத்தொன்று அல்லது முப்பத்திரண்டு வயது இருக்கும். அவள் அடிக்கடி ஸ்ரீராமகிருஷ்ணரைத் தரிசிப்பது வழக்கம். அபரிமிதமான ஆழ்ந்த பக்தி கொண்டவள். அத்தகைய பக்தை நித்தியகோபாலின் அற்புதமான தெய்விகப் பரவச நிலையைக் கண்டு அவரைத் தன் குழந்தையாகப் பாவித்து அன்பு செலுத்தினள். நித்தியகோபாலை அவள் அடிக்கடி தன் வீட்டுக்கு அழைத்துச் செல்வதும் உண்டு.

ஸ்ரீராமகிருஷ்ணர் (நித்தியகோபாலிடம்): நீ அங்கே போகிருயா?

நித்தியகோபால் (ஒரு குழந்தை போல): போகிறேன். அவள் என்னை அழைத்துச் செல்கிருள்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: ஏ சாது, ஜாக்கிரதையாக இரு! எப்போதாவது ஒன்று இரண்டு தடவை சென்று வரலாம். அதிகமாகப் போகாதே. வழுக்கி விழுந்துவிடுவாய். காமினி காஞ்சனம்—பெண் பொன்—ஆகிய இதுதான் மாயை. சாதுக்கள் பெண்களிடமிருந்து மிக மிகத் தூரத்தில் விலகியிருக்க வேண்டும். அதில், பெண்சுழலில் எல்லோருமே மூழ்கிப் போய்விடுகிருர்கள். அங்கே பிரம்மாவும் விஷ்ணுவும்கூட வீழ்ந்து திணறுகிருர்கள்.

இவ்விதம் குருதேவர் சொல்வதை எல்லாம் நித்தியகோபால் மிகவும் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்.

ம — (தமக்குள்): என்ன ஆச்சரியம்! நித்தியகோபால் பரமஹம்ச நிலையை அடைந்தவர் என்று குருதேவரே அடிக்கடி கூறுகிருர். இப்படிப்பட்ட உயர்ந்த நிலையை அடைந்திருப்பவருக்கும்கூட ஆபத்து ஏற்பட்டுவிடுமா? சந்நியாசிகள் விஷயத்தில் தான் குருதேவர் எவ்வளவு கடினமான நியமங்களை விதித்திருக்கிருர்! பெண்களுடன் நெருங்கிப் பழகுவதனுல் சந்நியாசிகளும் தங்கள் இலட்சியத்தினின்று விலகி வீழ்ச்சியடைவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுவிடும். சாதுக்கள் இத்தகைய உயர்ந்த இலட்சியங்களைத் தங்கள் வாழ்க்கை மூலம் எடுத்துக்காட்டாவிட்டால் சாதாரண மக்கள் கடைத்தேறுவதற்கு வேறு வழி ஏது? அந்தப் பெண்மணியோ மிகவும் பக்தி வாய்ந்தவளாக இருக்கிருள். என்ருலும்கூட அங்கு ஆபத்திற்கு இடம் இருக்கிறது.

ஸ்ரீகிருஷ்ண சைதன்யர் தமது சீடரான சின்ன ஹரிதாஸ் என்ற பக்தருக்கு ஏன் அவ்வளவு கடுமையான தண்டனை விதித்தார்

என்பது இப்போது எனக்குப் புரிகிறது. ஸ்ரீசைதன்யதேவர் தடை விதித்திருந்தும், சின்ன ஹரிதாஸ் பக்திமதியான ஒரு விதவையுடன் பேசிவிட்டார். ஆனல் ஹரிதாஸ் ஒரு துறவி ஆயிற்றே! ஆதலால்தான் கிருஷ்ண சைதன்யர் ஹரிதாஸை ஒதுக்கி அறவே புறக்கணித்துவிட்டார்! அது எப்படிப்பட்ட கடுமையான தண்டனே! சந்நியாசிக்குத்தான் எவ்வளவு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட் டிருக்கின்றன! நித்திய கோபால் மீது குருதேவருக்குத்தான் எத்தகைய ஆழ்ந்த அன்பு இருக்கிறது! பிற்காலத்தில் நித்தியகோபாலுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்று நினைத்து, முன்கூட்டி இப்போதே குருதேவர் அவரை எச்சரிக்கிருர்!

குருதேவர் சொன்னதைக் கேட்டுக் குழுமியிருந்த பக்தர்கள் வியப்புக் காரணமாகப் பேச்சற்று இருந்தனர். ‘ஏசாது, ஜாக்கிரதையாக இரு!’ என்ற குருதேவரின் சொற்கள் பக்தர்களின் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருந்தன.

இப்போது குருதேவர் பக்தர்களுடன் தமது அறையின் வடகிழக்குத் தாழ்வாரத்தில் அமர்ந்திருந்தார். அவர்களுள் தட்சிணேசுவரத்தைச் சேர்ந்த ஓர் இல்லற பக்தரும் இருந்தார். அந்தப் பக்தர் தமது வீட்டில் வேதாந்த ஆராய்ச்சிகளில் ஈடுபடுவது வழக்கம். குருதேவர் முன்னிலையில் அவர் கேதார் சட்டர்ஜியுடன் சப்தப்பிரம்மம் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். ○

வெல்க பாரத அன்னை

சந்தனம் எங்கள் நாட்டின் புழுதி
கிராம மனைத்தும் தவ பூமி
சிறுமிய ரெல்லாம் தேவியின் வடிவம்
சிறுவரனைவரும் ராமனே

1. கோயிலைப் போலே உடல்கள் புனிதம்
மாந்தரனைவரும் உபகாரி
சிங்கத்துடனே விளையாடிடுவோம்
ஆவினம் எங்கள் அன்புத்தாய்
காலையில் ஆலய மணிகள் முழங்கும்
கிளிகள் கண்ணன் பெயர் பாடும்
சிறுமிய ரெல்லாம் தேவியின் வடிவம்
சிறுவரனைவரும் ராமனே!

2. உழைப்பால் விதியை மாற்றும் மண்ணிது
உழைப்பின் நோக்கம் பொதுநலமே
தியாகமும் தவமும் கவிகள் பாட்டின்
கருவாய் அமையும் நாடிது
கங்கை போலத் தூய ஞானம்
ஜீவநதியெனப் பாய்ந்திடும்
சிறுமிய ரெல்லாம் தேவியின் வடிவம்
சிறுவரனைவரும் ராமனே!

3. போர்க்களந் தனிலே எங்கள் வீரர்
புனித கீதையை ஓதுவர்
ஏர்முனையின்கீழ் தவழ்ந்து வருவாள்
எங்கள் அன்னை சீதையே
வாழ்வின் முடிவாய் விளங்குவதிங்கே
இறைவன் திருவடி நீழலே
சிறுமிய ரெல்லாம் தேவியின் வடிவம்
சிறுவரனைவரும் ராமனே!

தமிழில்: இராம. கோபாலன்



புதிய இந்தியாவைப் படைப்போம்

ஸ்ரீமத் சுவாமி வீரேச்வரானந்தஜி மகராஜ்

சுதந்திரத்திற்குப் பிறகு நாடு முழுவதும், மக்களிடம் குறிப்பாக இளைஞர்களிடம் நம் நாட்டைப் புதுப்பிக்க வேண்டும் என்னும் உற்சாகம் மிகப் பெரிய அளவில் தோன்றியுள்ளது. இது மிகவும் பாராட்டுதற்குரியதாகும். இத்தகைய காரியத்தைச் செய்வதற்கு முன்பு எதிர்கால இந்தியா எப்படி உருவாக்கப்பட வேண்டும் என்பது பற்றிய தெளிவான சிந்தனை வேண்டும்.

ஓர் ஓவியர் திரைக்கிழியில் ஓவியம் தீட்டுவதற்கு முன், தம் மனதில் தாம் தீட்ட வேண்டிய ஓவியம் பற்றிய தெளிவான வடிவத்தைச் சிந்தித்துக்கொள்கிறார். அதுபோலவே என்ஜினியர் ஒருவர் ஒரு கட்டிடத்தைக் கட்டுவதற்கு முன்பு, அந்தக் கட்டிடம் எதற்குப் பயன் படப்போகிறது? அது பள்ளிக்கூடமா, மருத்துவ நிலையமா, அரசாங்க அலுவலகமா அல்லது வீடா என்று அதைப்பற்றிய முழு விவரங்களையும் தெரிந்து கொள்கிறார். அதன் பிறகு வரைபடம் தயாரிக்கிறார். பிறகு அதன்படி கட்டிடம் எழுப்புகிறார்.

அது போலவே நாம் உருவாக்க விரும்பும் எதிர்கால இந்தியாவைப் பற்றியும் நமக்கு ஒரு தெளிவான சிந்தனை வேண்டும். நாம் இந்தியாவை ஒரு பெரிய இராணுவ நாடாக்கப் போகிறோமா? நிச்சயமாக அப்படி ஏதும் இல்லை என்றே நான் நம்புகிறேன். ஏனென்றால், இராணுவ பலம் நெடுங்காலம் நிலைப்பதில்லை. ஹிட்லர், முஸோலினியைப் போன்றவர்களின் சரித்திரங்களைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தாலே இது விளங்கும்.

நம் நாடு ஏழைநாடு. நம் மக்கள் அனைவருக்கும் உணவளிப்பதற்காகவே நாம் செல்வத்தை விரும்புகிறோம். ஆனால் வெறும் சோறும் தண்ணீருமே நம் பிரச்னைகளைத் தீர்த்துவிடுமா? அமெரிக்க மக்களும், அவர்களைப் போன்று முன்னேறிய நாட்டைச் சேர்ந்தவர்களும், தங்களிடம் இருக்கும் ஏராளமான செல்வம் காரணமாக அமைதியுடனும் உண்மையான மகிழ்ச்சியுடனும் வாழ்கிறார்களா? அப்படி அவர்கள் வாழ்வதாகத் தெரியவில்லை. அந்த நாடுகளில் சிலவற்றிலுள்ள பணக்காரப் பெண்களையும் இளைஞர்களையும் பாருங்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கையின் மீது எரிச்சலும் ஆத்திரமும் அடைந்தவர்களாக இங்கும் அங்கும் அலைந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களில் சிலபேர் மிக மிகப் பெரிய செல்வர் வீட்டுப் பிள்ளைகள். ஆனால் வாழ்க்கையில் இலட்சியம் ஏதும் இல்லாமையால் பயங்கரமான ஒரு வெறுமையால் தாக்கப்பட்டு அவர்கள் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

நம் நாட்டைக் காத்துக்கொள்வதற்காக மட்டுமே நாம் இராணுவ பலத்தை விரும்புகிறோம்; அருகிலுள்ள நாடுகளைக் கொள்ளையடிப்பதற்காக அல்ல. நாம் செல்வத்தை விரும்புவதும் நம் மக்களைப் பசியிலிருந்து காக்க வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் செல்வத்தைப் பெருக்குவதும் இராணுவத்தைப் பெருக்குவதும் நமது நாட்டின் இலட்சியம் அல்ல. இந்த இரண்டிலிருந்தும் வேறுபட்ட ஒன்று நமக்குத் தேவைப்படுகிறது. செல்வத்தோடும் வலிமையோடும் நமக்குச் சாந்தியைக் கொண்டு வரும் மற்றொன்று என்ன?

அதை அறிய வேண்டுமானால், நம் நாடு அசோகர், சந்திரகுப்தர், கனிஷ்கர் முதலான அரசர்களின் காலத்தில் செல்வத்-

திலும் படைவலிமையிலும் மகிழ்ச்சியிலும் மகத்தானதாக விளங்கியதற்குக் காரணம் என்ன என்பதை நம் பழங்கால வரலாற்றில் பார்க்க வேண்டும். வேத காலத்திலும் புத்தர் காலத்திலும் இந்தியாவை மகோன்னத தமாக்கக் கூடிய மாபெரும் இலட்சியங்களை மக்கள் பெற்றிருந்தார்கள். அப்படியானால் இப்போதைய சீரழிவு எப்படி ஏற்பட்டது? நம்மை இழிவு நிலைக்குக் கொண்டு வந்த அந்தக் காரணங்களை நாம் கண்டுபிடிக்க வேண்டும். எதிர்கால இந்தியாவை உருவாக்கும்போது நம்மை மகத்தானவராக்க வல்ல இலட்சியங்களை மட்டுமே கைக்கொள்ள வேண்டும். நம்மை அழிவுக்கும் நாசத்திற்கும் கொண்டு செல்லும் அனைத்தையும் வீசியெறிய வேண்டும். அத்துடன், இப்போது புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள விஞ்ஞானம் தொழில்நுட்பம் முதலியவற்றையும் கைக் கொள்ள வேண்டும்.

நாம் இப்போது விஞ்ஞானத்தில் அசைக்க முடியாத நம்பிக்கையுடையவர்களாக இருக்கிறோம். விஞ்ஞானத்திற்கு உட்பட்டதாக எது இல்லையோ அதை மூட நம்பிக்கை என்கிறோம். ஆனால் நம்முடைய பழங்காலத்தை முற்றிலும் ஒதுக்கித் தள்ளுவதும், அதிலுள்ள நன்மைகளைப் பற்றிக் கவலைப் படாமல் இருப்பதும் கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக நம்மை ஒரே நாடாகச் சேர்த்து வைத்தது எது என்பதைத் தெரிந்து கொள்ளாமல் ஒதுக்குவதும், காலத்தின் சோதனைக்கு முன்னால் நில்லாமல் அழிந்து போனதும், இருநூறு ஆண்டுகள்கூடச் சீராக வாழாததுமான ஒரு நாகரிகத்தின் பின்னால் ஓடுவதும்தான் விஞ்ஞானமா? இந்த நாகரிகத்தின் இலட்சியங்கள் அவற்றைக் கைக்கொண்டுள்ள மேல்நாட்டு மக்களின் பிரச்னைகளையெல்லாம் தீர்த்து விட்டனவா? அவர்கள் அமைதியாகவும் மகிழ்ச்சியுடனும் இருக்கிறார்களா? அவர்கள் அப்படி வாழ்வதாகத் தெரியவில்லை. அப்படியென்றால் அத்தகைய இலட்சியத்தின் பின்னால் ஏன் ஓடுகிறீர்கள்?

நாம் மனிதர்கள். கடவுள் நமக்குச் சிந்திக்கும் ஆற்றலைத் தந்திருக்கிறார். ஆவேசத்தோடு பேசும் ஒவ்வொருவரின் கருத்தையும் கேட்டு, அவர்களின் பின்னால் ஓடாமலிருப்பதற்காகத்தான் கடவுள் நமக்குச் சிந்திக்கும் ஆற்றலைத் தந்திருக்கிறார். எனவே நாம் எதிர்கால இந்தியாவை உருவாக்குவதற்கு முன்பு, இந்தியாவின் பழங்காலச் செய்திகள் அனைத்தையும், நிகழ்காலச் செய்திகளையும் திரட்ட வேண்டும். அவை பற்றி நன்றாகச் சிந்திக்க வேண்டும். அந்தச் சிந்தனையின் பேரில் எதிர்கால இந்தியாவை உருவாக்கும் திட்டத்தை அமைக்க வேண்டும்; வெறும் உணர்ச்சிகளால் மட்டுமே நாம் அலைகழியக் கூடாது.

முதன்முதலில் நமக்கு வேண்டியது நல்லொழுக்கம். நல்லொழுக்கம் இல்லாமல் மகத்தான காரியம் எதையும் சாதிக்க முடியாது. மகாத்மா காந்தியைப் பாருங்கள்! அவர் தமது நல்லொழுக்கத்தின் மூலம் வலிமை வாய்ந்த ஆங்கில அரசாங்கத்தை இந்த நாட்டை விட்டே அனுப்பினார். துப்பாக்கிகளையோ அணுக்குண்டுகளையோ அவர் பயன்படுத்தவில்லை. எனவே மகத்தான எதிர்கால இந்தியாவை உருவாக்க வேண்டுமென்றால், முதலில் நம்மிடம் நாம் சிறந்த ஒழுக்கத்தை உருவாக்க வேண்டும். அதன் பிறகு நம்முடைய சிந்தனையைப் பயன்படுத்தி எத்தகைய இந்தியாவை உருவாக்க வேண்டுமென்று ஆலோசிக்க வேண்டும். அதன் பிறகு வேலையைத் துவங்க வேண்டும். அந்த வேலையை நிறைவேற்றுவதில் நம் உயிரையே தியாகம் செய்ய வேண்டியிருப்பினும் தயங்காமல் தியாகம் செய்ய வேண்டும். எதிர்கால இந்தியாவை உருவாக்கும் இத்தகைய சிந்தனைக்கும் ஆராய்ச்சிக்கும் சுவாமி விவேகானந்தரின் நூல்கள் நமக்குத் துணைசெய்யும். இந்தியப் பண்பாட்டின் மகோன்னதமான இலட்சியத்திற்கு நம்மை அழைத்துச் செல்லும் வழிகாட்டியாக அவை அமைந்துள்ளன.

சுவாமி விவேகானந்தரின் நூல்களிலிருந்து தொகுக்கப்பட்டுள்ள இந்த நூல் மேலோட்டமாக இந்தியாவின் வீழ்ச்சிக்கான காரணங்

களையும், இந்தியாவின் இன்றைய நிலையையும், அதை உயர்த்துவதற்கான வழிகளையும் நமக்குக் கூறுகிறது. மகத்தான எதிர்கால இந்தியாவை உருவாக்கப் பாடுபடும் நம் இளைஞர்களுக்கு இந்த நூல் உதவியாக இருக்கும்.

* * *

சுவாமி விவேகானந்தர் தமது சொற்பொழிவுகளிலும் நூல்களிலும் தெரிவித்த சில கருத்துக்களைத் தனிதனித் தலைப்புக்களின் கீழ் தொகுத்து REBUILD INDIA என்ற பெயரில் பேலூர் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தினர் வெளியிட்டிருந்தார்கள். அதன் தமிழாக்கம் 'புதிய இந்தியாவைப் படைப்போம்' என்ற பெயரில் மலிவுப் பதிப்பாக இப்போது வெளிவந்துள்ளது. அந்த நூலில் இடம் பெற்றுள்ள அணிந்துரை மேலே ஒரு கட்டுரையாகத் தரப்பட்டிருக்கிறது.

புதிய இந்தியாவைப் படைப்போம்

[ஆசிரியர்: சுவாமி விவேகானந்தர்; வெளியிட்டோர்: ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை —600 004, பக்கம்: 98+viii; மலிவுப் பதிப்பு; விலை ரூ. 1]

குரு நானக் அருள்வாக்கு

நான் உன்னிலும் வேறுபட்டவனாக எவனைக் கூறுவேன்? எவனும் இல்லை. எல்லாரிடமும் ஒரு நிரங்கார (மாயையற்ற) சொரூபம் குடிகொண்டிருக்கிறது. உலகத்தவரின் உள்ளத்தில் துவைத (வேறுபாடு) எண்ணம் மாயையால் ஏற்படுகிறது. அதனால் தான் பாமர உலகம் காமம், குரோதம், அகங்காரம் ஆகியவற்றில் சிக்கி அழிகிறது. தீய அறிவுதான் வேறுபாட்டுணர்வை உருவாக்குகிறது. ஆன்மா இந்தத் துவைத சிந்தனையை ஏற்பதனால் இறப்புக்குப் பின் மறுபிறப்புக்களுக்காக மயங்குகிறது.

நிலம், நீர், தேயு, வாயு, வானம் ஆகிய ஐம்பூதங்களிலும், ஆண் பெண்பாலர்களிலும் நான் உன்னைத் தவிர வேறு எவரையும் காணவில்லை. கதிரவன் தண்மதிகளின் ஒளியிலும் என் இறைவன்தான் காட்சியளிக்கிறான். அவன் அருள்கூர்ந்து என் உள்ளத்தைத் தன்னுள் ஏற்றுக்கொண்டான்.

மாயையற்ற என் சத்குரு எனக்கு மெய்ஞ்ஞானத்தைத் தந்தார். அதன்மூலம், வேற்றுமையுணர்வைத் துறந்து, ஒருமையுணர்வைப் பெற்றேன். மாயாசூனியனான பரம்பொருளின் ஆட்சிதான் அகிலமெங்கும் நிலவுகிறது. அவன்தான் சகலத்தையும் படைக்கிறான்.

நன்மை தீமை என்ற இரண்டு வழிகள்; ஆனால் இறைவன் ஒருவன். குருவின் உபதேசத்தால் அவனது ஆணைபற்றி அறிந்துகொள். எல்லா மாருட்டங்களும் உள்ளத்தில் உருவாகின்றன. நானக் சொல்வது: அவன் ஒருவனே போற்றத் தக்கவன்.

இறைவன் ஒருவனே என்று எல்லோரும் கூறுகிறார்கள். ஆனால் அவர்களை விட்டுச் செருக்குப் போகவில்லை. உள்ளும் புறமும் ஒன்றாக வாழ்பவனே மாயை நீங்கிய இறைவனின் உறைவிடத்தை உணர்கிறான்.

இறைவன் உன் அருகில்தான் இருக்கிறான்; எட்ட முடியாதவன் என்று நினையாதே. அவன் ஒருவனே; எல்லாப் படைப்புக்களிலும் பரந்துளன். நானக்! அவன் ஒருவனையே போற்றுபவர்தாம் அவனோடு இரண்டறக் கலக்கிறார்கள்.

ஒரே உருவை நேசிப்பதுதான் சிறந்த முறை. அவன் ஐம்பூதங்களிலும் வியாபித்திருக்கிறான்; எதிரொலிக்கிறான்; ஒரே வண்டு மூவுலகையும் சுற்றுகிறது. அந்த ஒருவனை உணர்பவன் போற்றப்பெறுகிறான். அவன் இறைவனைத் தரிசிக்கிறான். அவன் தன் அறிவு சிந்தனைகளை அந்த ஒருமையைப் பெறவே பயன்படுத்துகிறான்.

ஆனால் குருவின் மூலமாகச் சிலருக்குத்தான் இந்த வாய்ப்புக் கிட்டுகிறது. குரு அருள்கூர்ந்து இந்த வாய்ப்பை நல்கும்போது, அவன் பேரின்பமெய்துகிறான். இத்தகைய உணர்வையே குரு தாம் உணர்ந்து அளிக்கிறார்.

விஜயதீபம்

பாரதியின் நூற்றாண்டு விழா

> உயிர்களிடத்தில் அன்பு வேணும்; — தெய்வம்
> உண்மை என்று தானறிதல் வேணும்;
> வயிர முடைய நெஞ்சு வேணும்; — இது
> வாழும் முறைமையடி பாப்பா.
>
> —மகாகவி பாரதியார்

செந்தமிழ் நாடெனும் போதினிலே மட்டு மல்ல, பாரதி எனும் போதினிலும் இன்பத் தேன் வந்து நம் காதினில் பாயவே செய் கிறது.

தமிழ்மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்த, எதிர்பார்க்க வேண்டிய பாரதி நூற்றாண்டு விழாத் துவங்கியுள்ளது.

'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று பாடிய கவிச் சக்கரவர்த்தியின் நூற்றாண்டு விழா, தமிழ் ஒலிக்கும் இடமெல்லாம் கொண் டாடப்பெறுகிறது.

இந்திய நலனுக்கு உகந்ததல்ல என்று தெரிந்தும் வேற்றுமையை வளர்த்தே வயிறு வளர்ப்போரும் உண்டு. ஆனால் மகாகவி பாரதியாரோ 'ஒன்றாகக் காண்பதே காட்சி' என்ற அடிப்படையில் பகைவனுக்கும் அருளும் நன்னெஞ்சும், 'பாரதம் முழுவதும் ஒன்றே' என்ற நோக்கும் கொண்டவர்.

'பல மலர்கள் பூத்தபோதும் நந்தவனம் ஒன்றுதான்.' பாரதத்தில் பல மொழிகளும் பல்வேறு பழக்க வழக்கங்களும் நடைமுறை யில் இருப்பினும் 'நாம் அனைவரும் ஹிந்து' என்ற ஒரு சிந்தனையே அடித்தளமாக அமைந்திருக்கிறது. இந்த உண்மையை, மக்கள் கவியாகிய பாரதியார், 'செப்பு மொழி பதினெட்டுடையாள், எனில் சிந்தனை ஒன்றுடையாள்' என்று எடுத்துக் காட்டு வதன் மூலம் வேற்றுமை பேசுவோரை எல்லாம் சிந்திக்க வைக்கிறார்.

ஓர் உண்மைக் கவிஞன் தனது காலத்தில் வாழும் மக்களின் மனநிலையைப் பிரதிபலிக் கும் காலத்தின் கண்ணாடியாகத்தான் விளங்க முடியும். அதற்கேற்ப, சுதந்திரப் போராட்டக் காலத்தில் பாரதியார் போர்க் களக் கவிஞராகவே விளங்கினார். அவரது தேசபக்திப் பாடல்களை, 'தேசோப்நிஷதம்' என்று அந்தக் காலத்திலேயே அறிஞர்கள் அங்கீகரித்திருக்கிறார்கள்.

சுதந்திர உணர்வைத் தட்டி எழுப்புவதற்கு மகாகவி பாடிய பாடல்கள் சிறப்பாக அன்றைய சூழ்நிலைகளுக்கு ஏற்றவையாக இருந்ததை நாம் காண்கிறோம். அவர் பாடிய தெய்வபக்திப் பாடல்களோ என்றைய சூழ் நிலையிலும் மக்களுக்கு வழி காட்ட வல்லவை யாக விளங்கி வருகின்றன.

வள்ளுவர் 'ஞானவெட்டியான்' என்ற நூலையும் இயற்றினார். எனினும் தாம் இயற்றிய திருக்குறளினாலேயே அவர் இன் றும் வாழ்கிறார். கம்பர் 'சடகோபரந்தாதி' என்ற நூலையும் இயற்றினார். எனினும் தாம் இயற்றிய கம்ப ராமாயணத்தினாலேயே அவர் இன்றும் வாழ்கிறார். அதாவது கவிபாடும் ஆற்றலால் மட்டும் அவர்களின் புகழ் நிலைக்கவில்லை. கவிதைக்கு அவர்கள் எடுத்துக்கொண்ட பொருள்தான் அவர்களின் புகழுக்கு முக்கியக் காரணமாக அமைந்தது.

அதுபோல், கவிபாடும் ஆற்றலால் மட்டும் பாரதியைத் தமிழுலகம் பாராட்டவில்லை; அத்துடன் கவிதைக்கும் உரைநடைக்கும் அவர் எடுத்துக்கொண்ட பொருளாலேயே அவரைக் குறித்து இன்றும் நினைவுகூர்கிறோம்.

ஹிந்துமதத்தின், பாரதநாட்டின், சநாதனப் பண்பாடுகளின் அடிப்படையில் கவிதைகளையும் உரைநடைகளையும் பாரதி வடித்தார். எனவேதான் அன்றும் இன்றும் என்றும் வாழ்பவராக அவர் இருக்கிறார்; 'காலம் சென்ற' கவிஞராக இல்லாமல் 'காலம் வென்ற' கவிஞராக அவர் ஒளிவீசுகிறார்.

பாரதி நூற்றாண்டு விழாக் கொண்டாடப் பெறும் இந்தத் தருணத்தில், அவரைப் போலவே ஹிந்து பாரம்பரிய உணர்வுகளைக் கொண்ட கவிஞர்கள் தமிழ் மண்ணில் தோன்ற அனைவரும் பிரார்த்திப்போமாக.

கவியரசர் பழமைக் கவிஞரும் புதுமைக் கவிஞருமாவார். நல்ல கருத்துக்களாக அமைந்த பழமையும், நல்ல கருத்துக்களாக அமையும் புதுமையும் பாரதியின் எழுத்தோவியத்தில் கைகோத்துச் செல்வதைப் பார்க்கலாம்.

எந்தக் கருத்தைப் பற்றியானாலும் அதன் சாராம்சமாக விளங்கும் மையக் கருத்து இன்னது என்பதைக் கிரகித்துக்கொள்ளும் ஸூக்ஷ்மதிருஷ்டி, அபூர்வமான ஓர் ஆற்றல், பாரதியிடம் இருந்தது. அவரது கருத்துக்களை ஊன்றிப் படிப்பவர்களுக்கு இந்த உண்மை நிச்சயம் புலனாகும்.

'நமக்குத் தொழில் கவிதை' என்றவர் பாரதி. இமைப்பொழுதும் சோராதிருந்து கவிதையினால் மட்டுமின்றி உரைநடையினாலும் அவர் நாட்டுக்கு உழைத்தார்.

பாரதியின் கவிதை பரவிய அளவுக்கு அவரது உரைநடை நூல்கள் பரவவில்லை. அவரது உரைநடை தமிழ் மக்களிடையே போதிய அளவு பரவாதது தமிழகத்தின் தவக்குறைவு என்றே சொல்ல வேண்டும்.

கவிச்சக்கரவர்த்தியின் கவிதைகள், கட்டுரைகள் ஆகிய இரண்டையும் முழுமையாகப் படித்தவர்களுக்கே அவரது முழு உருவமும் தெரியும். பாரதியின் கவிதைகளைப் படித்தே பலரும் அவர்மீது ஈடுபாடு கொள்கிறார்கள். அதைத் தவறென்று சொல்லவில்லை. அவர்கள், கவியரசரின் கவிதைகளுடன் உரைநடைகளையும் படிப்பார்களேயானால் அவரது பூத்துக் குலுங்கும் மேதாவிலாசத்தைக் கண்டு பெரிதும் வியப்படைவார்கள். பாரதியின் கட்டுரைகளையும் படிக்கும் பழக்கம் மக்களுக்கு ஏற்பட வேண்டும் என்ற ஏக்கத்தினாலேயே விஜயதீபம் இவ்விதம் குறிப்பிடுகிறது.



1908-ஆம் ஆண்டு ஜனவரி 10-ஆம் நாள் சென்னை மயிலாப்பூரிலிருந்து பாரதியார் எழுதுகிறார் : ''யான் (பாரதமாதாவுக்கு) சூட்டியிருக்கும் (கவிதையாகிய) மலர்கள் மணமற்றன என்பதை நன்கறிவேன். தேவலோகத்துப் பாரிஜாத மலர்கள் சூடத் தகுதி கொண்ட திருவடிகளுக்கு எனது மணமற்ற முருக்கம்பூக்கள் அணிக் குறைவை விளைவிக்கும் என்பதையும் நான் தெரிந்துள்ளேன். ஆயினும் உள்ளன்பு மிகுதியால் இச்செய்கையிலே துணிவு கொண்டுவிட்டேன். சாக்கியன் எறிந்த கற்களையும் சிவபிரான் மலர்களாகக் கருதி அங்கீகரிக்கவில்லையா?

அதனையொப்ப, எனது குணமற்ற பூக்களை யும் பாரதமாதா கருணையுடன் ஏற்றருளுக!''

தன் செல்வமகன் சூட்டிய கவிதைகளைப் பாரதமாதா மனமுவந்து ஏற்று அங்கீகரித் தாள். அவள் அங்கீகரித்ததைப் பாரதியும் மிகக் குறுகிய காலத்திற்குள்ளாகவே உணர்ந் தும் கொண்டார்.

பாரதியின் 'கண்ணன் பாட்டு' நூல்வடி வில் முதற்பதிப்பு வெளிவந்தபோது, அதன் முகவுரையில் நெல்லையப்ப பிள்ளை பின்வரு மாறு குறிப்பிட்டுள்ளார்:—

''பாரதியார் பாடல்களின் பெருமையைப் பற்றி யான் விரித்துக் கூறுவதென்றால், இந்த முகவுரை அளவுகடந்து பெரிதாய்விடும். ஒரு வார்த்தை மட்டும் கூறுகின்றேன்: இந்த ஆசிரியன் காலத்திற்குப் பின், எத்தனையோ நூற்றாண்டுகளுக்குப் பின், இவர் பாடல்களைத் தமிழ்நாட்டு மாதர்களும் புருஷர்களும் மிகுந்த இன்பத்துடன் படித்துக் களிப்படையும் காட்சியை யான் இப்பொழுதே காண்கின் றேன்.''

'பாரதியைத் தமிழர்கள் மறந்துவிட்டோம்' என்று சொல்லிச் சிலர் அங்கலாய்க்கிறார்கள். ஏதோ சொல்ல வேண்டும் என்பதற்காக அவர்கள் அப்படிச் சொல்கிறார்களே தவிர, அவர்கள் சொல்வதில் உள்ளபடி உண்மை எதுவுமில்லை. பாரதியை நினைவில் கொண் டிருப்பதனால்தான் எத்தனை எத்தனையோ இடங்களில் பாரதி விழாக்கள் நடந்தன; இன்றும் நடந்து வருகின்றன.

தங்கள் பெயருடன் 'பாரதி' என்று சேர்த்துக் கொள்பவர்கள் இருக்கிறார்கள். அந்த வகையில் பாரதி சகாப்தம், பாரதி பரம்பரை, பாரதி குடும்பம் என்று பெற்றுள்ள தற்காலத் தமிழ்க் கவிஞர் பாரதி ஒருவரே ஆவார்.

இருக்கும்போதே இறந்துபோன கவிஞர் களே அதிகம். பாரதியோ இறந்த பின்னும் வாழ்கிறார்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், சுவாமி அபேதானந்தர்,

பிரபஞ்ச சிந்தனை

கூட்டித் தள்ள வேண்டிய குப்பையை ஆராய்வதனால் பயனுண்டா? பிரபஞ்ச விஷயங்களில் மனதை அதிகமாக ஈடுபட விடக்கூடாது. பரந்த உலகத்தைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டே இருந்தோமானால் மனம் விரிந்துகொண்டே போகுமே தவிர ஒடுங்காது. இந்தச் சிந்தனைகள் எல்லாம் எழுந்தால் சகலமும் எழும். அது அடங் கினால் எல்லாமும் அடங்கும்.

—ஞானானந்தர்

சகோதரி நிவேதிதை ஆகியோரிடம் பெரிதும் பக்தி கொண்டவர் பாரதியார். இதனைத் தெளிவாக விளக்கி, 'பாரதியாரும் இராம கிருஷ்ணர் இயக்கமும்' என்ற தலைப்பில், பெ. சு. மணி அவர்கள் தனியொரு நூலையே எழுதியுள்ளார்.

'பாரதியார் வாக்கில் விவேகானந்தர்' என்ற தலைப்பில் அடுத்த மாத இதழில் சில கருத்துக்களைத் தொகுத்துத் தர இருக் கிறோம். அந்தத் தொகுப்பிலிருந்து சுவாமி விவேகானந்தரிடம் பாரதி கொண்டிருந்த ஈடுபாட்டை ஒருவாறு அறியலாம்.

பாரதியாரின் புதல்வியான சகுந்தலா பாரதி 'என் தந்தை' என்ற தலைப்பில், சுப்பிரமணிய பாரதியாரைக் குறித்து ஒரு நூல் எழுதியுள்ளார். அதில் அவர் பின்வரு மாறு குறிப்பிட்டுள்ளார் :

''எனக்கு வயது ஏழு அல்லது எட்டு இருக் கும். எங்கள் வீட்டில் சுவாமி விவேகானந் தரின் பிறந்த நாள் கொண்டாடுவது வழக்கம். முதல்முதலாக அப்பா (சுப்பிரமணிய பாரதி யார்) எனக்குப் பிரசங்கம் செய்யக் கற்றுக் கொடுக்கும்பொருட்டு, சுவாமி விவேகானந் தருக்கு வணக்கமும், விவேகானந்தர் சரித் திரத்தின் சுருக்கமும் எழுதிக் கொடுத்துப் படிக்கும்படி செய்தார். ராமகிருஷ்ணரின் சரித்திரம், தேவி நிவேதிதாவின் சரிதை இவற்றைச் சிறு கதைகள் போல் எனக்குச் சொல்வார்.''

பாரதி சகாப்தத்தின் முடிமணியாகத் திகழும் பாரதி நூற்றுண்டு விழாச் சமயத்தில், 'வாழ்க நீ! எம்மான், இந்த வையத்து நாட்டிலெல்லாம்' என்று பாரதிக்கே சொல்லிப் புகழாரம் சூட்டுவோம்; பாரதி இலக்கியங்களைப் படைத்த, படைக்கும், பதிப்பித்த, பதிப்பிக்கும் எழுத்தாளர்களையும் பதிப்பாளர்களையும் நன்றியுடன் வாழ்த்துவோம்.

ஓர் எழுத்தாளனை மதிப்பது என்பது, அவன் எழுதிய நூலைக் காசு கொடுத்து வாங்கிப் படிப்பது என்பதில்தான் அடங்கியிருக்கிறது. எனவே பாரதியை மதிப்பவர்கள் அவரது நூலைக் காசு கொடுத்து வாங்கிப் படிக்க வேண்டும்.

'தமிழ்ஜாதிக்குப் புதிய வாழ்வு தர வேண்டுமென்று கங்கணம் கட்டி நிற்கும் பராசக்தியே என்னை இத்தொழிலிலே தூண்டினுள்' என்று மகாகவி பாரதியே தமது எழுத்துத் தொழிலைப்பற்றி ஒரு சமயம் குறிப்பிட்டார். எனவே பாரதி நூற்றுண்டில் பாரதியின் படைப்புக்கள் தமிழ் பேசும் ஒவ்வோர் இல்லத்திலும் இடம் பெற்றுவிட வேண்டும்.

பாரதியின் கவிதைகளைத் தாளத்தோடு பாட வேண்டும் அல்லது பாடக் கேட்க வேண்டும். தாளத்தோடு அவற்றைப் பாடும் போது, கவிதையழகோடு புதுமெருகுகூடி 'பொன்மலர் நாற்றமுடைத்து' என்பதற்கு ஏற்ப, மேலும் உள்ளத்தை வசீகரித்துவிடுகிறது. இது பாரதியின் பாடல்களைப் பாடக் கேட்ட ஒவ்வொருவருடைய அனுபவமாகும்.

ஒரு சமயம் ராஜாஜி தமக்கு இருக்கும் ஓர் ஆவலைத் தெரிவித்தார். அவரது ஆவல் தான் பாரதி நூற்றுண்டு விழாச் சமயத்தில் விஜயதீபத்தின் ஆவலுமாகும்.

பாரதிபற்றி ராஜாஜி கூறிய கருத்துடன் இந்தக் கட்டுரை நிறைவுபெறுகிறது.

ராஜாஜி கூறியது :

''எனது ஆசை என்னவென்றுல் ஆண் குழந்தைகள் பெண்குழந்தைகள் எல்லோரும் பாரதியார் பாடல்களை நன்றுகப் பாடக் கற்றுக்கொள்ள வேண்டும். பிறகு அது ரொம்ப நாளைக்குப் பிரயோஜனப்படும்.

''பாரதி நம் தமிழ்நாட்டுக்குப் பெரிய கவி. முன்காலத்தில் இருந்த கவி போன்றவர்.

''நம் நாட்டில் தேசபக்தியை அவர் கவிதையினுல் ஏற்படுத்தினர். தேசபக்தி மட்டுமல்ல, தெய்வபக்தியையும் உண்டாக்கினர்.

''தேசபக்தி, தெய்வபக்தி ஆகிய இரண்டையும் தூண்டி அவரது கவிதைகள் உணர்ச்சியையும் உண்டாக்கின. அது மட்டுமல்ல; ஆங்கிலம் படித்தவர்களுக்குத் தமிழ்பக்தியை உண்டாக்கின. எல்லோருக்கும் தைரியத்தை உண்டாக்கின. வேலை செய்ய வேண்டும் என்கிற ஆசையை உண்டாக்கின. 'கவிதையினுல் இவ்வளவும் உண்டா?' என்று நினைக்கலாம். பாரதியாரின் பாடல்களை நன்றுகக் கற்றுப் பாடினுல் உங்களுக்கே அது தெரியும்.'' ○

எவ்வாறு சூரியனின் இயல்பு பிரகாசமோ, தண்ணீரின் இயல்பு குளுமையோ, அக்கினியின் இயல்பு உஷ்ணமோ அவ்வாறே சச்சிதானந்தத் தன்மையும் நித்திய நிர்மலத் தன்மையும் ஆத்மாவின் இயல்பாகும்.

—ஆத்மபோதம்

தண்ணீரில் உள்ள சலனத்தைத் தண்ணீரில் பிரதிபலிக்கும் சந்திரனைச் சார்ந்ததாக அறிவற்றவர்கள் நினைக்கிருர்கள். அதுபோல மனதில் உள்ள கர்த்தா, போக்தா என்ற எண்ணங்களை ஆத்மாவைச் சார்ந்தனவாக அவிவேகிகள் கருதுகிருர்கள்.

அன்னை ஸ்ரீசாரதாதேவியின் வரலாறு

சுவாமி தபஸ்யானந்தர்

குருதேவர், அன்னையார் ஆகிய இவர்களின் தெய்விக அன்பைப்பற்றிப் பேசுகையில் கௌரிமா என்னும் குருதேவரின் ஒரு சிஷ்யை, ''அன்னையாரும் குருதேவரும் ஐம்பது கஜ தூரத்தில்தான் வாழ்ந்து வந்தார்கள் என்றாலும், ஒருவரை ஒருவர் பல நாள் பார்க்கக்கூட மாட்டார்கள். ஆனாலும், இருவருக்குமிடையே எவ்வளவு ஆழமான அன்பும் பரிவும் இருந்தன! ஒரு முறை, அன்னையாருக்குத் தலைவலி ஏற்பட்ட போது குருதேவர், சிறிய குழந்தையைப் போல், தாமே தலைவலியால் துடிதுடிப்பவராகத் தம் அண்ணன் மகன் ராம்லாலிடம், 'டேய் ராம்லால்! என்ன காரணத்தாலடா அவளுக்குத் தலைவலி வந்தது?' என்று பரிதாபமாக, மிகுந்த வேதனையுடன் அடிக்கடி கேட்டுக்கொண்டிருந்ததை நானே பார்த்திருக்கிறேன்'' என்று கூறியுள்ளார்.

பிற்காலத்தில், திரிகுணாதீதர் என்ற சந்நியாசப் பெயரோடு புகழ் பெற்றவரும், அமெரிக்கா சென்று குருதேவரின் உபதேசங்களைப் பரப்பியவரும், மிகச் சிறந்த ஆற்றல் பெற்றவருமான சாரதா பிரசன்னாவை, ஒரு நாள் தாம் உயிரோடிருந்த காலத்திலேயே, குருதேவர் அன்னையாரிடம் தீட்சை பெற்று வருமாறு அனுப்பி வைத்தார். அனுப்புவதற்கு முன், 'ராதையின் மாயை அளவில்லாதது; எவராலும் அறிய முடியாதது; அந்தச் சக்தியால் கோடிக்கணக்கான ராமர்களும், கோடிக்கணக்கான கிருஷ்ணர்களும் படைக்கப்பட்டார்கள்; வாழவைக்கப்பட்டார்கள்; அழிக்கப்பட்டார்கள்' என்ற பொருளைத் தரும் வைஷ்ணவப் பாடல் ஒன்றைக் கூறி, அவரை அனுப்பி வைத்தார்.

இந்தப் பாடல்மூலம், 'பிரம்மமாகிய தமது சக்திக்கு, சக்தியாகிய அன்னை சாரதையின் சக்தி சிறிதும் தாழ்ந்ததில்லை' என்று குருதேவர் அறிவுறுத்தினார்.

காளிபாத கோஷ் என்பவர் மிகவும் படித்திருந்தும், நிறையச் சம்பளம் தரும் வேலையில் அமர்ந்திருந்தும், குடி முதலான தீய பழக்கங்களால் குடும்பத்தை நரகமாக்கினார். பக்தியும் கற்பும் நிறைந்த அவருடைய மனைவி, கணவருக்கு ஏதாவது ஒரு வழி செய்ய வேண்டும் என்று குருதேவரிடம் பிரார்த்தனை செய்து கண்ணீர் விட்டாள். குருதேவர் அவளை அன்னையாரிடம் அனுப்பி வைத்தார். அன்னையின் அருளால் காளிபாத கோஷ் திருந்தியதுடன், குருதேவரின் பரம பக்தர்களுள் ஒருவராகவும் மாறினார்.

தமது தவத்தாலும் தியானத்தாலும் சக்தியூட்டப்பட்ட உயர்ந்த மந்திரங்களை, குருதேவர் அன்னையாருக்குப் போதித்து, அவற்றை மக்களுக்கு உபதேசிக்கும் முறைகளையும் கற்பித்தார்.

பிற்காலத்தில், அன்னையார் தாம் தீட்சையளிக்கும் வழிமுறைகளைப்பற்றிப் பேசிய போது, ''இந்த மந்திரங்கள் அனைத்தையும் நான் குருதேவரிடமிருந்து பெற்றேன். இவற்றின் மூலம் ஒருவர் நிச்சயமாகத் தெய்விக நிலையை அடைவது உறுதி'' என்று கூறியுள்ளார்.

ஒரு முறை குருதேவரின் முன்னிலையிலேயே இருதயன் அன்னையாரை மரியாதைக் குறைவாகப் பேசினான். அன்னையார் அதைப் பொறுத்துக்கொண்டு பதில் பேசாமல் நஹபத்திற்குச் சென்றுவிட்டார். இருதயனின் நலனில் அக்கறை கொண்ட குருதேவர், ''நீ என்னை எவ்வளவோ நிந்தனை செய்கிறாய்! கேவலமாகப் பேசுகிறாய்! ஆனால், அவளிடம் மட்டும் விளையாடாதே! எனக்குள்ளே இருக்கும் சக்தி, சீறிக் கொண்டு படம் எடுத்தபடி வந்தாலும் ஒரு வேளை நீ பிழைத்துக்கொள்வாய். ஆனால் அவளிடம் இருக்கும் அந்தச் சக்தி சீறி

எழுந்தால், பிரம்மா, விஷ்ணு, சிவன் யார் வந்தாலும், உன்னைக் காப்பாற்ற முடியாது'' என்று எச்சரித்தார்.*

குருதேவரும், தம்மாலும் அன்னையார் மனம் எந்தவிதத்திலும் புண்பட்டுவிடாதபடி, மிகவும் எச்சரிக்கையாகவே இருந்தார். அன்னையார் குடும்ப விஷயத்திலும் மற்றவற்றிலும் தமது விருப்பம் இதுதான் என்பதை உறுதியாகச் சொல்லிவிட்டால், அவருடைய விருப்பத்தை அழிக்கவோ, அதற்கு மாறாக நடக்கவோ கூட அவர் முயலமாட்டார்.



அந்தக் காலத்தில் ஸ்ரீராமகிருஷ்ணரைக் காண வரும் பக்தர்கள் அவருக்கு நிறைந்த அளவில் பழங்களும் இனிப்புகளும் கொண்டு வருவார்கள். தாராள மனப்பான்மை கொண்ட அன்னையார் அவற்றில் சிறு பகுதியைக் குருதேவருக்கென்று எடுத்து வைத்துவிட்டு, மற்றதையெல்லாம் அங்கு வரும் பக்தர்களுக்கும், அண்டை அயலில் உள்ள குழந்தைகளுக்கும், மற்றவர்களுக்கும் கொடுத்துக் காலிசெய்துவிடுவார். எதையும் மிச்சமாகவே வைக்கமாட்டார்.

ஒரு நாள் அன்னையார் இவ்வாறு வாரி வழங்குவதைக் கண்ட குருதேவர், 'எல்லாவற்றையும் செலவு செய்துவிடும் அன்னையாரின் ஊதாரித்தனம்' என்று அதை நினைத்துக்கொண்டு, அவரைக் கண்டிக்கும் வகையில், ''இப்படிக் கண்டபடி செலவு செய்தால் நீ எப்படிக் குடும்பம் நடத்துவாய்?'' என்று கேட்டார். கூடுமான வரையில் கோபம் வெளியே தெரியாதபடிதான் குருதேவர் அன்னையாரை இப்படிக் கேட்டார்.

உடனே, அன்னையாரின் முகம் வாடிவிட்டது. பசித்துத் தன்னிடம் வருபவர்களுக்குப் பசிதீர ஒரு பொருளைத் தரும் தமது தாய்மை உணர்ச்சிக்கு, குருதேவர் இப்படித் தடை விதிக்கிறாரே என்று நினைத்து மனம் வாடினார். உடனே நஹபத்திற்குள் சென்றுவிட்டார்.

அன்னையாரின் மனநிலையைக் குருதேவர் உடனே புரிந்துகொண்டார். பரபரப்போடு அருகிலிருந்த ராம்லாலை அழைத்து, ''டேய் ராம்லால்! உன் சித்தி கோபித்துக்கொண்டு போய்விட்டாள். ஓடு ஓடு! ஓடிப்போய் அவளைச் சமாதானப்படுத்து. இல்லையென்றால் நான் அவ்வளவுதான்!'' என்று ராம்லாலை, அன்னையைச் சமாதானம் செய்ய அனுப்பி வைத்தார்.

கொஞ்சகாலமாக, திடீரென்று வயதானவள் ஒருத்தி நஹபத்திற்கு அடிக்கடி வந்து, மணிக்கணக்கில் அன்னையாருடன் பேசிக்கொண்டிருந்துவிட்டுச் செல்ல ஆரம்பித்தாள். அவள் தூய்மையற்ற வாழ்க்கையை நடத்தியவள். ஸ்ரீராமகிருஷ்ணருக்கு இது தெரியும். எனவே, அன்னையிடம், அந்தப் பெண்மணியுடன் அப்படி நெருங்கிப் பழகுவது அவ்வளவு விரும்பத் தக்கதல்ல என்று கூறினார். எதைக் காரணமாக வைத்துக்கொண்டு அவர் அன்னையாரிடம் இப்படிக் கூறினார் என்பதை நம்மால் அறிய முடியாது. அவருக்கு அன்னையாரின் ஒழுக்கம் அத்தகைய பெண்களின் கூட்டுறவால் கெட முடியாதபடி மிகவும் உயர்ந்தது என்று உறுதியாகத் தெரியும். ஆனால், தம்முடைய சாதாரணப் பெண்பக்தர்களும் அன்னையின் தொடர்பால், அந்தக் கிழவியிடம் தொடர்புகொண்டு, அதன் மூலம் தங்கள் உயர்வை

* குருதேவரின் இந்த எச்சரிக்கையை இருதயன் அலட்சியம் செய்தான். தொடர்ந்து அன்னையாரை அவமதித்தான். அதன் விளைவுகளால் அவன் தனது பிற்கால வாழ்க்கையில் பெரிதும் துன்பப்பட நேர்ந்தது.

இழந்துவிடலாம் என்ற எண்ணம் அவருக்குத் தோன்றியிருக்கலாம். குருதேவர், தூய்மை யற்ற அந்தப் பெண்ணோடு அன்னையார் பழக வேண்டாம் என்று கூறியதற்கு எது காரண மாக இருக்கலாமோ, அது நமக்குத் திட்ட வட்டமாகத் தெரியவில்லை. ஆனால், அன்னையை அந்தப் பெண்ணோடு பழக வேண்டாம் என்று குருதேவர் கூறியது, நல்லவர் கெட்டவர் எல்லோரிடமும் ஒரே மாதிரி அன்பு செலுத்தும் அன்னையாரின் தாய்மனதிற்கு எதிராகத் தோன்றியது. குருதேவர் அந்தக் கிழவியோடு பழக வேண்டாம் என்று சொன்னபிறகும்கூட, அந்தக் கிழவி அடிக்கடி அன்னையாரிடம் வந்து பேசிவிட்டுச் செல்வதை, யோகின்மா பார்த்தாள்.

'அம்மா!' என்று அழைத்தபடி தம்மிடம் வரும் அந்தக் கிழவியை அன்னையார் அன்போடு வீட்டிற்குள் அழைத்து அமரச் செய்து, கனிவாகப் பேசி, சாப்பிடுவதற்கோ அல்லது வீட்டிற்கு எடுத்துச் செல்வதற்கோ ஏதாவது ஒரு பொருளைக் கொடுத்து அனுப்பிக்கொண்டிருந்தார். குருதேவரும் அன்னையின் இந்தச் செயல்களைப் பார்த்துக் கொண்டே இருந்தார். ஆனால், இதுபற்றி எரிச்சல் அடையவோ, ஏதாவது சொல் லவோ இல்லை. அமைதியாகவே இருந்தார். இயல்பிலேயே தம்முடைய பக்தர்களின் சிறு தவற்றைக்கூடப் பொறுத்துக்கொள்ளாதவர் குருதேவர். அப்படிப்பட்டவர் அன்னை யாரின் இந்த நடத்தையைக் கண்டும் பேசாமல் இருந்துவிட்டார். இது, அன்னை யாரின் உயர்ந்த மனநிலையின் ஆழத்தை அவர் அறிந்துகொண்டதன் விளைவாகவே அமைந்ததாகும்.

பஞ்ச தபஸ் என்பது கொழுந்துவிட் டெரியும் ஐந்து நெருப்புக்களுக்கிடையில் அமர்ந்து செய்யும் தவமாகும். இத்தகைய தவம் செய்பவர் தம்மைச் சுற்றிலும் நான்கு திசைகளில் முக்கோண வடிவில் ஏழடி இடை வெளிகளுக்கு இடையே, நான்கு பெரும் தீயை மூட்டுவார்கள். கொதிக்கிற வெயில் காலத்தில், நல்ல பகல்நேரத்தில் அந்த

மதத்தின் ஆணிவேர் கருணை என்பதில் தான் அடங்கியிருக்கிறது. உடல்மீது உள்ள ஆசையே அகங்காரத்திற்கு ஆணிவேராகும். உடல் அழிவதாக இருந்தால்கூட, கருணை யை ஒருபோதும் கைவிடக்கூடாது.

—துளசிதாசர்

நெருப்புக்களின் நடுவே அமர்ந்து வானத்தி லிருந்து தலைக்கு மேல் காய்கிற சூரியனும் ஒரு நெருப்பாகக் கொண்டு ஜபமும் தியானமும் பிரார்த்தனையும் செய்வார்கள். அன்னையார் இத்தகைய கடுமையான தவத்தைச் செய்தார்.

அன்னையார், ஒரு வகையான ஆவி கொடுத்த துன்பத்தை நீக்கிக்கொள்வதற் காக இந்தத் தவத்தைச் செய்ததாகத் தெரிகிறது. ஆவிகளைப் பற்றிய சாஸ்திரங் களில் சிறந்த ஞானம் பெற்ற நேபாள நாட்டுச் சந்நியாசினி ஒருவரின் ஆலோ சனைப்படி அன்னையார் இந்தத் தவத்தை மேற்கொண்டார்.

அன்னையார் காமார்புகூரில் வாழ்ந்தபோது பத்து அல்லது பன்னிரண்டு வயதுள்ள பெண்ணின் ஆவி ஒன்று வீட்டில் எங்கே சென்றாலும் எப்போதும் தம்முடன் வந்து கொண்டே இருப்பதைப் பார்த்தார். சில நேரங்களில் நீண்ட தாடியுடைய சந்நியாசி யின் ஆவி ஒன்றும் அவருக்குத் தோன்றும். அந்த ஆவி அடிக்கடி அன்னையாரைப் பஞ்ச தபஸ் செய்யும்படி வற்புறுத்தும். இதைப் பற்றி யோகின்மாவோடு கலந்து ஆலோசித்த அன்னையார், இறுதியில் இரண்டுபேரும் பஞ்ச தபஸ் செய்வது என்று முடிவு செய்தார்கள்.

இந்தத் தவத்தைப்பற்றி அன்னையார் கூறும்போது, ''பசுஞ்சாணத்தால் செய்த வறட்டிகளைக் கொண்டு நான்கு பக்கங் களிலும் தீ மூட்டப்பட்டது. மேலே சூரியனின் கடுமையான கதிர்கள் காய்ந்து கொண்டிருந்தன. காலையில் குளித்து முடித்துவிட்டு நெருப்பருகே வந்தேன். கொழுந்து விட்டு அது பயங்கரமாக எரிந்து கொண்டிருப்பதைப் பார்த்ததும் என்னைப் பயம் பிடித்துக்கொண்டது. 'இப்படிக் கடுமையாக எரியும் நெருப்பின் நடுவே புக

வசிஷ்ட முனிவர் இராமபிரானுக்குக் கூறியது: ஆத்மஞானத்தை அடைபவன் சர்வ துக்கங்களுமில்லாத உயர்ந்த நிலையைப் பெறுகிறுன். ஆதலால் ஆத்மஞானம் என்பது ராஜவித்யை என்றும், ராஜகுஹ்யம் என்றும், தலைசிறந்த வித்யை என்றும் சொல்லப்படுகிறது.

—யோகவாசிஷ்டம், 2—11—81

முடியுமா? சூரியன் மறையும்வரை உட்கார்ந்திருக்க முடியுமா?' என்று ஆச்சரியப்பட்டேன். பிறகு மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு, அந்த நெருப்பின் நடுவே சென்று உட்கார்ந்து, குருதேவரின் பெயரை ஜபிக்க ஆரம்பித்தவுடனே, நெருப்பின் கொடிய வெப்பம் தெரியவே இல்லை. இந்தப் பஞ்ச தபஸ்ஸை நான் ஏழு நாள் செய்தேன். இதனுல்தான், சிவப்பாக இருந்த என் நிறம் எரிந்து இப்போது இருப்பது போல், இப்படிக் கரிபோல் கறுத்துவிட்டது. இந்தத் தவத்திற்குப் பிறகு அந்தப் பெண்ணோ அல்லது சந்நியாசியின் ஆவியோ தோன்றுவதே இல்லை'' என்ருர்.

அன்னையாரின் வாழ்க்கையில் இந்தக் காலம்தான் உலக மக்கள் அனைவருக்கும் தீவிரமாக ஆன்மிகப் பயிற்சியைத் தந்த காலமாகும்.

இந்தக் காலத்தில்தான் அன்னையாரின் ஆன்மிக வளர்ச்சி அதன் உச்சநிலையை அடைந்தது. உலக மக்களிடம் ஆன்மிக விழிப்பை ஏற்படுத்துகிற குருதேவரின் பணியைத் தொடர்ந்து செய்வதற்கான தகுதியை அவர் இந்தக் காலத்தில்தான் பெற்ருர்.

அன்னையார் காமார்புகூரிலிருந்து கல்கத்தா வந்தபிறகு அவருடைய மிக நெருக்கமான துணைவிகளான யோகின்மா முதலியவர்கள் அன்னையார் புறஉலகத்திலிருந்து விடுபட்டு ஆழ்ந்து ஆன்மிக உலகத்தில் அடிக்கடி மூழ்குவதையும், உலகை முற்றிலும் மறந்துவிடுவதையும் கண்டனர். இந்த உலகத்தில் எவரிடமும் காண முடியாத கருணையும் அன்பும் தாய்மையும் கலந்த ஒரு தெய்விக ஒளி அவர் முகத்தில் வீசுவதையும் கண்டனர். கல்கத்தாவில் 1888-ஆம் ஆண்டு அவர் தங்கியிருந்தபோது, அவரிடம் பொங்கிப் பெருகிக்கொண்டிருந்த தெய்விகத்தை மேலும் தெளிவாகவும் உறுதியாகவும் பல வழிகளில் காணும் வாய்ப்பையும் பெற்ருர்கள்.

ஒரு நாள் அன்னையார் பலராம் போஸின் வீட்டுமாடியில் தியானத்தில் அமர்ந்தபோது, புறஉலகை மறந்து சமாதியில் மூழ்கியிருப்பதை யோகின்மா கண்டார். தம்முடைய அந்த நிலையைப்பற்றி அன்னையார் யோகின்மாவிடம் கூறும்போது, ''நான் அந்த ஆழ்ந்த சமாதிநிலையில் மிகமிகத் தொலைவில் இருக்கிற ஓர் உலகத்திற்குச் சென்றேன். அங்குள்ள ஒவ்வொருவரும் என்னிடம் அளவற்ற அன்பு காட்டினர். அப்போது என் அழகு வார்த்தைகளால் வருணிக்க முடியாத அளவு அவ்வளவு அற்புதமாக இருந்தது. ஸ்ரீராமகிருஷ்ணரும் அங்கு இருந்தார். மிகுந்த அன்போடும் பாசத்தோடும் குருதேவரின் பக்கத்தில் அவர்கள் என்னை அமர்த்தினர். அங்கே நான் அனுபவித்த பேரானந்தத்தின் இயல்பை என்னுல் விவரிக்கவே முடியவில்லை. பிறகு என் மனம் அந்தக் கரைகாணுத பேரின்ப வெள்ளத்திலிருந்து கீழிறங்கி இந்த உலகத்திற்கு வரத் துவங்கியது. வந்ததும் என்னுடைய இந்த உடம்பு இங்கே விழுந்து கிடப்பதைக் கண்டேன். இத்தகைய விகாரமான உடம்பிற்குள் நான் எப்படி நுழைவது என்று பெரிதும் தயங்கினேன். என் மனதை அந்த உடம்பிற்குள் போய் நுழையும்படி நான் எவ்வளவு சொல்லிப் பார்த்தும் அது கேட்கவே இல்லை. நெடுநேரப் போராட்டத்திற்குப் பிறகே மனம் அந்த உடம்பிற்குள் நுழைந்தது. உடனே இந்த உடம்பு உணர்வுபெற்று எழுந்துகொண்டது'' என்று கூறினுர்.

ஸ்ரீராமகிருஷ்ணரும் இது போன்ற பல காட்சிகளைக் காண்பார். மற்ருெரு நாள் அன்னையார் நீலாம்பர் முகர்ஜியின் வீட்டில் யோகின்மா, கோலாப்மா இவர்களோடு தியானம் செய்துகொண்டிருந்தார். யோகின்

மா தமது தியானத்தை முடித்துக்கொண்டதும் தம்மருகே அமர்ந்திருந்த அன்னையாரைப் பார்த்தார். அவர் உடல் உணர்வே இல்லாமல் மூச்சும்கூட நின்று போனது போல் மரக்கட்டையாக, ஆடாமல் அசையாமல் ஆழ்ந்த தியானத்தில் மூழ்கிக் கிடப்பதைக் கண்டார்.

அந்த நிலையிலிருந்து அன்னையார் திரும்பவும் உலக நினைவு பெறுவதற்கு நீண்ட நேரமாகியது. அப்படி நீண்ட நேரம் கழித்துக் கொஞ்சம் நினைவு திரும்பியதும், ''ஓ யோகின்! என் கைகள் எங்கே? கால்கள் எங்கே?'' என்று திரும்பத் திரும்பக் கேட்க ஆரம்பித்தார். உடனே யோகின்மா அவருடைய கைகளையும் கால்களையும் பிடித்து அழுத்தியவாறே, ''அம்மா! இதோ உங்கள் கைகள்! இதோ உங்கள் கால்கள்'' என்று கூறினர். திரும்பத் திரும்பக் கைகளையும் கால்களையும் அழுத்தியபடி அதேபோல் கூறிக்கொண்டே இருந்தார்! இதன் பிறகு நெடுநேரம் கழித்து, அன்னையாருக்கு உடல் உணர்வு முழுதும் திரும்பியது. அன்னையின் இந்த அனுபவம் பலரால் ஆன்மிக வாழ்வின் மிகமிக உயர்ந்ததாகக் குறிப்பிடப்படும் 'நிர்விகல்ப சமாதிநிலை'யாகும்.

இந்த நேரத்தில் மற்றோர் அற்புதமான காட்சியையும் அன்னையார் கண்டார். இந்தக் காட்சி அவர் மனதிலும் வாழ்விலும் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. ஸ்ரீராமகிருஷ்ணர் கங்கைநீரில் இறங்குவதையும், அவருடைய உடம்பு முழுவதும் அந்தப் புனித கங்கைநீரில் தண்ணீரோடு தண்ணீராகக் கரைந்து மறைந்துபோய்விடுவதையும் அவர் கண்டார். சிறிது நேரத்திற்கெல்லாம் நரேந்திரர் அந்தத் தண்ணீரைக் கையில் வாரி, 'ஸ்ரீராமகிருஷ்ணருக்குப் பெருமை உண்டாவதாக!' என்று சொல்லியபடி கணக்கில்லாத மனிதர்களின் மீது தெளிப்பதையும் கண்டார். இந்தக் காட்சி அவருக்கு மிகமிகத் தெளிவாகத் நம் கண்முன்னுலேயே நடப்பது போல் தெரிந்தது, அவர் மனதில் ஆழ்ந்த உணர்வை ஏற்படுத்தியது.

இந்தக் காட்சிக்குப் பிறகு நெடுங்காலம் வரைக்கும், அவர் கங்கையைக் காணும் போதெல்லாம் அதற்குள் கால் வைப்பதற்குத் தயங்கிக் கரையிலேயே நின்றுகொண்டிருப்பார். குருதேவரின் உடல்மறைவிற்குப் பிறகு இந்த உலகில் தாம் வாழ வேண்டிய அவசியமே இல்லை, வாழ்ந்தும் பயனில்லை என்று நினைத்துக்கொண்டிருந்தவருக்கு இந்தக் காட்சி அவர் வாழ்ந்தே ஆக வேண்டும் என்றும், அதற்கு ஒரு நோக்கமும் அவசியமும் உள்ளன என்றும் வலியுறுத்தியது.

மேற்கண்ட காட்சி—குருதேவர் கங்கை நீரோடு கரைந்து அதை விவேகானந்தர் மக்கள்மேல் தெளிக்கும் காட்சி-குருதேவரின் கொள்கைகளை சுவாமி விவேகானந்தர் எதிர்காலத்தில் மிகப் பெரிய அமைப்பின்மூலம் உலகமெங்கும் பரப்பப்போகிற காரியத்தின் துவக்கமாக அமைந்தது. அத்துடன், குருதேவரின் உபதேசங்களை உலகம் முழுவதும் எடுத்துச்சென்று பரப்பும் பொறுப்பு விவேகானந்தருக்குக் கொடுக்கப்பட்டது போல், குருதேவரின் கொள்கைகளைப் பரப்புவதில் அன்னையாரின் பங்கு, அவர் இருக்கும் இடத்திலேயே இருந்து உலகின் கண்களுக்கு அதிகம் தெரியாமல் அடக்கமாக நடக்கப் போகிறது என்பதும் தெரிந்தது. ○

மனிதனுக்கு முக்தி அளிக்க உதவும் கர்மங்கள் அனைத்திலும் ஆத்மஞானமே மிகவும் சிறந்தது. ஏனெனில் அது ஞானத்துக்குச் சிகரமாகவும் அமரத்துவத்தை அளிப்பதாகவும் உள்ளது.

—மனுஸ்மிருதி

எவன் எந்தப் பிராணியையும் துன்புறுத்துவதில்லையோ, அவன் எதை நினைத்தாலும், எதைச் செய்தாலும், எதில் உறுதியான பற்று வைத்தாலும் அவற்றையெல்லாம் முயற்சியில்லாமலே அடைவான்.

—மனுஸ்மிருதி

பாவை பாடிய பக்திநெறி

நவநீதா சந்திரசேகரன்

பூமாலை சூடிக் கொடுக்கவும், பாமாலை பாடிக் களிக்கவும் பாரினில் பெண்ணாய் அவதரித்தாள் ஒரு பாவை. 'மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்' என்று பக்திக் காதலில் மலர்ந்தாள். காதல் உள்ளமாகிய எரிமலையில் குமுறும் நெருப்பாக இருந்த காதல், பாடலாகப் பரிணமித்தது. கண்ணனை அடைய, கோபியர் காத்யாயனி தேவியைக் குறித்து நோற்ற பாவை நோன்பினைத் தானும் நோற்ற கோதையின் நாவில் வேதம் திருப்பாவையாய்ப் பரிமளித்தது.

பாவைப் பாடல்களைப் பாடப் பாடப் பாதகங்கள் போம். பரமனடி காண்போம். பக்தி நெறி செல்வோம்.

சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பா ரீரண்டு மால்வரைத் தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்

என்று ஆண்டாளே பாவைப் பாடற் பயனை இறுதிப் பாடலில் அறுதியிட்டு உறுதியாகக் கூறுகிறாள். அந்தப் பயனை நாமும் பெறப் பாடல் சில காண்போம்.

சில்லென்ற காற்று மெல்லவே வீசும் இளங்காலை. பனித் தலை வீழும்போது, புழைக்கடைத் தோட்டத்து வாவியுள் செங்கமலம் வாய் நெகிழ்கிறது. ஆம்பல் வாய் கூம்புகிறது. வெள்ளிமீன் எழுந்து வியாழனும் உறங்கிற்று. குற்றம் ஒன்றில்லாத கோவலர் தம் ஆயர்பாடி. மதிநிறைந்த நன்னாளில் பனிவெள்ளம் ஒரு புறம்; கன்றினை ஈன்ற எருமை கன்றுக்கு இரங்கி முலைவழியே சொரியும் பால் இல்லம் சேறாக்கப் பால்வெள்ளம் ஒரு புறம்; காசும் பிறப்பும் கலகலப்பக் கைபற்றி வாசநறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால் ஓசைப்படுத்தும் தயிரரவம் ஒரு புறம்; புள்ளரையன் கோயில் வெள்ளை விளிசங்கின் பேரரவம் ஒரு புறம்; செங்கற்பொடிக் கூறை வெண்பல் தவத்தவர் தங்கள் திருக்கோயிலில் சங்கிடுவான் போகின்ற பக்திவெள்ளம் ஒரு புறம்.

பூபாளம் பாடும் புலர்ந்த காலைப் பொழுது. சத்துவகுணம் தலையெடுக்கும். தமோகுணம் தானே அகலும். அன்றியும், ஆண்டாள் காட்டும் பால் வெள்ளம், பனி வெள்ளம், பக்தி வெள்ளம் அனைத்தும் தூய்மையின் சின்னங்கள், வாய்மையின் பிம்பங்கள், உண்மையின் உருவங்கள். புறச்சூழலின் ஏற்றம் கூறி அகச் சூழ்நிலையின் அமைதிக்கு வழி காட்டுகிறாள் பாவை.



செம்பினில் களிம்பு போல இயல்பிலேயே உயிரில் உறையும் மும்மலங்களை அகற்றி, இறைநேயம் கொள்ளல், தூமணிமாடத்தில் துயிலும் பெண்ணை, புள்ளினங்கள் சிலம்பும் ஓசையை அறியாச் சிறுபெண்ணை, ஆனைச் சாத்தான் பேசின பேச்சரவம் உணராத நாயகப் பெண்பிள்ளையை, நோற்றுச் சுவர்க்கம் புக நினைந்து அதற்கு மாற்றாக அறிதுயில் கொண்ட அம்மனை, போதரிக் கண்ணியை, செல்வப் பெண்டாட்டியை, நற்செல்வன் தங்கையை அழைக்கிறாள். யார்? மானுடர்

செய்த பெருத்தவத்தால் பூதேவி அம்சமாகப் பூமிக்கு வந்த ஆண்டாள்.

சித்தத்தை விஷ்ணுவிடம் சமர்ப்பித்த விஷ்ணுசித்தரின் அருமைப் பெண்ணுக வளர்ந்து வந்த பாவை நாமெல்லாம் உய்ய வழி காட்டுகிருள்.

தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்
தொழுது
வாயினுல் பாடி மனத்தினுல் சிந்திக்க,
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் என்கிருள். (5)

பந்தபாசக் கட்டுக்களினின்று நீங்க, தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனே நினைந்து, நறுமணமலர் தூவித் தொழுது, வாயால் அவன்புகழ் பாடி, மனத்தால் அவனைச் சிந்திக்க, அந்த அளவிலேயே நம் தொல்வினை தீரும். செய்த பிழை நீங்கும். இனி வரும் துன்பங்களும் பகலவனைக் கண்ட பனி போல், தீ முன் நின்ற தூசு போல், இம்மென எழுமுன் ஆழும்.

கருணைமுகிலே, உய்வார் உய்யும் வகை அருள்செய்யும் ஆழிமழைக் கண்ணனை, அண்டர்கோன் அணியரங்கனை நோற்ருல் பெறலாம். நோன்பு செய்ய நோய் தீரும். அது சரி, நோய் தீர மருந்து கிடைத்தால் போதுமா? மருந்து தெரிந்தாலும் மருத்துவன் சொல்வழி உண்டால்தானே பிணி தீரும்? அதனுல்தான் ஆண்டாள், மகவு நோய் தீரத் தாய் மருந்துண்ணல் போல், தான் முன்னின்று நோற்று நமக்கு வழிகாட்டுகிருள்.

வையத்து வாழ்வீர்காள்! நேரிழையீர்!

நீராடப் போதுவீர்! வடமதுரை மைந்தனை, யமுனைத் துறைவனை, நப்பின்னை கேள்வனை, பங்கயக் கண்ணனை நினைந்து அமிழ்ந்து நீராடுங்கள்; பாலிற்படு நெய்யாக நிற்கும் பரந்தாமன் அருள் நினைந்து நெய் உண்ணுதீர்; திருவுள்ளத் தெளிவு காட்டும் பால் அருந்தாதீர்; காயாம்பூ மேனி எழில் காட்டும் கண்மை தீண்டாதீர்; பார்க்கின்ற பனிமலரூடு பார்த்திபனின் உருவெளித் தோற்றம் காண்பதால் மலர் சூடாதீர்; அனைத்தும் கண்ணனுக்கு எனச் சமர்ப்பணம் செய்யுங்கள்; பயனில சொல்லுதல், புறங்கூறல், இன்னுச் சொல் இயம்பல், பொய்யுரைத்தல், வெகுண்டுரைத்தல் போன்ற நாவினில் வரும் குற்றம் நீக்குங்கள்; உண்ணும் சோறும் பருகும் நீரும் கண்ணனே என நினையுங்கள். தக்கார்க்கு மிகுதியாக உதவுங்கள். பயன் தூக்கா உதவியைச் செய்தோம் என்ற பெருமிதமின்றிச் செய்வன செய்யுங்கள் என்று நோன்புக்கான விதி முறைகளை,

பையத் துயின்ற பரமனடி பாடி
நெய்யுண்ணேம் பாலுண்ணேம் நாட்காலே
நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம்
முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளை
சென்ருேதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி (2)

என்று விளங்கக் கூறுகிருள்.

கப்பம் தவிர்க்கும் கலியே! செற்ருர்க்கு வெப்பம் கொடுக்கும் விமலா! பூவைப்பூ வண்ணு! தென்னிலங்கை செற்றவனே! அன்று மூவடியால் மூவுலகு அளந்தவனே! குன்றினைக் குடையாய் எடுத்த கோவர்த்தனு! கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற நெடுமாலே! நீ அங்கண் இரண்டும்

நான் புனித நகரமாகிய அயோத்தியையும், கலியின் பாவங்களை அழிக்கும் சரயூ நதியையும், பிரபு ராமன் அன்பு காட்டிய அயோத்தி மக்களையும் வணங்குகிறேன்.

— துளசி ராமாயணம்

மெய்யடியார்களின் தொடர்பும் இறைவனைப்பற்றிய பேச்சும் ஆகிய இரண்டும் கிடைத்தற்கு அரியன; மனைவி மக்களும் செல்வச் செழிப்பும் பாவிகளுக்குக்கூடக் கிடைக்கின்றன.

—துளசிதாசர்

கொண்டெங்கள் மேல் நோக்குதியேல் எங்கள்மேல் சாபம் இழியும். (22) உன்னைப் பலவாறு நாங்கள் அருத்தித்து வந்தோம். எங்கட்கு இரங்குவாயாக! பறை தருவாயாக! பறை தருதியாகில், திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி வருத்தமும் தீர்ந்து மகிழ்வோம் (25) என்று கண்ணனை நினைந்து பெறும் மகிழ்வினை விளக்குகிருள்.

கூடாரை வெல்லும் கோவிந்தன் புகழ் பாடிப் பறைகொண்டு நாடு புகழும் பரிசினுல் நன்ருகச் சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே பாடகமே என்றனைய பல்கலனும் யாம் அணிவோம்; ஆடை உடுப்போம்; அதன் பின்னே பால்சோறு மூட நெய்பெய்து முழங்கை வழிவார, கூடியிருந்து குளிர்வோம் (27) என்று, மகிழ்வால் கூடி வாழ்வதனுல் வரும் கோடி நன்மையை விளக்குகிருள்.

கண்ணு! பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்த ஆய்குலச் சிறுமியர் நாங்கள்; நுண்ணறிவு இல்லாதவர். நலம்தான் ஒன்றுமிலோம்; அறியாத பிள்ளைகள். அன்புமிகுதியால் உன்னைச் சிறுபேர்கூறி அழைத்தோம். நீ சீறுமல் எமக்கொன்று அருள வேண்டும் (28) கோவிந்தா!

எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்
உன்றன்னேடு
உற்ருேமே யாவோம் உனக்கே நாம்
ஆட்செய்வோம்
மற்றை நம் காமங்கள் மாற்று. (29)

உன்றன்னேடு உறவேல் நமக்கிங்கு ஒழிக்க ஒழியாது; அதனுல் வரும் பிறவி அத்தனையும் உன்னுடன் உறவு கொண்டாட உதவிசெய். அன்றியும், அவ்வாறு வரும் பிறவி அத்தனையிலும் ஓங்கி உலகளந்த உத்தமன் பேரை நாங்கள் பாட வேண்டும். நோன்பு நோற்க வேண்டும்.

தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி
பெய்து
ஓங்கு பெருஞ் செந்நெலூடு கயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு
கண்படுப்ப,
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல்
பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைய வேண்டும் (3)

என வேண்டுகிருள். பாவை பாடிய பக்தி நெறி நின்று, வங்கக்கடல் கடைந்த மாதவனை, முகில் வண்ணனை, மூவர்தம் முதல்வனை நாமும் வாழ்த்தி, வாயாரப் பாடி மனதார நினைந்து வணங்கி, நீரும் சோறும் பெருக, நாடும் வீடும் சிறக்க, நலனும் வளனும் பொலிய, வையத்துள் வளமார் வாழ்வு வாழ வாழ்த்தி வணங்குவோமாக.

ஏகநாதரின் பொறுமை

த. காவேரி

ஏகநாதர் மகாராஷ்டிரத்தில் வாழ்ந்த மகான். அவர் தினந்தோறும் கோதாவரியில் நீராடி வருவார். ஒரு நாள் அப்படி அவர் திரும்பிய வழியில் நாஸ்திகன் ஒருவன் தன் வீட்டுமாடியிலிருந்து ஏகநாதரின் தலையில் வெற்றிலை எச்சிலைத் துப்பினுன். 'யார்? என்ன?' என்றுகூடப் பார்க்காமல் ஏகநாதர் அமைதியாகத் திரும்பிச் சென்று ஸ்நானம் செய்தார்.

திரும்பவும் அவர் நாஸ்திகனது வீட்டைத் தாண்டியபோது அவன் எச்சிலைத் துப்பினுன். மறுபடி ஸ்நானம் செய்தார் ஏகநாதர். 108 முறை இவ்வாறு நடந்தது. அதன் பின்புதான் நாஸ்திகன் ஏகநாதரது பெருமையை உணர்ந்தான். அவரது பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்தான். அவரிடம் மன்னிப்புக் கோரினுன்.

அவன் கூறியதைக் கேட்ட ஏகநாதர், "அப்பா, உண்மையில் நமஸ்கரிக்கத் தகுந்தவன் நீதான். உன்ருல்தான் இன்று கோதாவரியில் 108 முறை ஸ்நானம் செய்த புண்ணியம் கிடைத்தது" என்ருர். மகான்கள் தம்மை அற்பமாகவும், மற்றவர்களைப் பெரியவர்களாகவும் கருதுவார்கள்.

நாமும் இறைவனருளால் பொறுமையை வளர்க்கப் பாடுபட வேண்டும்.

திருவாதிரைத் திருநாள்

ராஜம் ஐயராமன்

ஆதிரை என்ற நட்சத்திரம் சிவபெருமானுக்கு உரியது. ஓணம் திருமாலுக்கு உரியது. எனவே இவ்விரு நாளையும் திருவாதிரை, திருவோணம் எனச் சிறப்பித்துக் கூறுவர். திருவாதிரை எல்லா மாதங்களிலும் வரும் நட்சத்திரமாயினும் மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரையையே மிகச் சிறப்புடன் வழிபட்டு வருகின்றனர். ஏனெனில், மார்கழித் திருவாதிரையில் சிவபெருமான் தமது திருக்கூத்தைப் பதஞ்சலி முனிவருக்கும் வியாக்கிரபாதருக்கும் காட்டியருளினர் என்பதனுலும், தேவர்களுக்கு மார்கழி மாதம் பிராம்ம முகூர்த்தமாகிய வைகறைப் பொழுது என்பதனுலும் மார்கழித் திருவாதிரை தனிச் சிறப்பும் புனிதமும் கொண்டதாகும்.

மேலும், இது சம்பந்தப் பெருமான் அவதாரம் செய்த நாளாகவும், அவருக்கு ஞானப்பால் ஊட்டப்பெற்ற தினமும் ஆகும். இந்த நாளைச் சிறப்பித்துச் சேக்கிழார்பெருமான், 'மதியணி புனிதன் நன்னுள்' என்று கூறியுள்ளார்.

நமக்கு ஓராண்டுக் காலம் என்பது தேவர்களுக்கு ஒரு நாளாகும். மகர சங்கராந்தி தொடங்கி அடுத்த மகர சங்கராந்தி வரை உள்ள காலம் தேவர்களுக்கு ஒரு நாளாகும். தை முதல் ஆனி முடிய உள்ள ஆறுமாத காலம் உத்தராயணம் எனப்படும். இது தேவர்களுக்குப் பகல்; ஆடி முதல் மார்கழி வரையில் உள்ள ஆறுமாத காலம் தட்சிணுயனம் எனப்படும். இது தேவர்களுக்கு இரவுக் காலம். மார்கழி மாதம் வைகறைப் பொழுதாகிய விடியற்காலை நேரமாகும். இந்த மாதத்தில் செய்யும் இறைவழிபாடு இறைவனுக்குச் செய்யும் உஷக்கால பூஜையாகும்.

எனவே தேவர்களின் வைகறைப் பொழுதான மார்கழியில் சிவபெருமானை அவனது திருநாளான் திருவாதிரையில் அன்புடன் வழிபடுவது ஆன்மகோடிகளின் மலநீக்கத்திற்கு நலமளிப்பதாகும்.

திருஆதிரை—திருவாதிரை. இதில் 'திரு' என்பது அடைமொழி. ஆ - ஆன்மா; திரை - மறைத்தல். ஆன்மாவை மறைத்தல் என்பது பொருள். அதாவது இறைவனின் திரோபவச் செயலை உணர்த்துவது. ஆன்மாக்களின் இச்சை, கிரியை, ஞானம் ஆகியவற்றை மறைத்து அவற்றின் வினைகளுக்கு ஏற்றவாறு பயனை நுகரச்செய்து, மலப்பற்று நீங்காத ஆன்மாக்களை மீளவும் உலகவாழ்வில் ஈடுபடுத்தும் இறைவனின் செயலை உணர்த்தும் நாளே திருவாதிரையாகும்.



திருவாதிரைத் திருநாளை 'ஆருத்திரா' என்றும் குறிப்பிடுவர். 'ஆருத்திரா' என்றுல் 'நனைதல்' என்று பொருள். அதாவது இறையருளில் நனைந்து மூழ்கித் திளைத்தல் என்பதாகும். இறைவன் ஆன்மாக்களிடம் இரக்கம் கொண்டு மலத்தை நீக்கும்பொருட்டு ஐந்தொழிலைப் புரிகிருன். அவற்றின் மூலம், நீரில் நனைந்து உடல்மாசினை நீக்குவதுபோல் அவனது அருகில் நனைந்து மனதின்

மாசினைப் போக்குதல் வேண்டிச் செய்யப் படும் விழாவே திருவாதிரை விழாவாகும்.

இந்த உலக சிருஷ்டியே இறைவனின் அற்புதத் திருக்கூத்தால் நிகழ்வதுதான். அண்ட சராசரங்கள் அவனது ஆட்டத்தினால் இயங்கி வருகின்றன. இந்தத் திருக்கூத்தை நடராஜப்பெருமான் சிதம்பரத்தில் ஆடிக் காட்டினார். இதை வியாக்கிரபாதர், பதஞ்சலி முனிவர், உமாதேவியார் முதலியோர் தில்லையில் மார்கழித் திருவாதிரை நாளில் கண்டு களித்தனர். இதனை உணர்த்தவே அன்று நடராஜப் பெருமானுக்குச் சிறப்பாக அபிஷேகம் நடைபெறும்.

இறைவன் உயிர்களின் நலத்திற்காகச் செய்யும் ஐந்தொழிலையும் உணர்த்தி நிற்பது நடராஜரின் திருவுருவமாகும். அவனது வலக்கையில் உள்ள உடுக்கை 'படைத்தல்' தொழிலைக் குறிக்கும். உடுக்கையின் ஒலி 'ஓம் ஓம்' என ஒலிக்கிறது. இந்த 'ஓம்' என்ற பிரணவமே படைத்தல் தொழிலுக்கு மூலகாரணமாகிறது. வலக்கை அபயகரம். இது 'காத்தல்' தொழிலைக் காட்டுகிறது. தீயேந்திய கை 'அழித்தல்' தொழிலைக் காட்டுகிறது. உயிர்கள் இளைப்பாறும் பொருட்டு அழித்தலைச் செய்கிறான். ஊன்றிய திருவடி 'மறைத்தல்' தொழிலையும், தூக்கிய திருவடி ஆன்மாக்களுக்கு இறைவன் முக்தியை அளிக்கும் 'அருளல்' தொழிலையும் உணர்த்துகின்றன.

இங்ஙனம் ஐந்தொழில் புரியும் நடராஜப் பெருமானுக்கு ஓர் ஆண்டில் ஆறு நாட்களில் மிகச் சிறப்பாக அபிஷேகம் நடைபெறும். இதில் உஷக்காலபூஜை மார்கழித் திருவாதிரையில்; மாசிமாதம் சுக்கில பக்ஷ சதுர்த்தசியில் காலைச்சந்தி பூஜை; சித்திரைத் திருவோணத்தில் உச்சிக்கால பூஜை; ஆனி உத்தரத்தில் பிற்பகல் பிரதோஷ காலபூஜை; ஆவணி பூர்வபட்ச சதுர்த்தசியில் மாலைச் சந்திபூஜை; புரட்டாசி பூர்வபட்ச சதுர்த்தசியில் அர்த்தஜாமப் பூஜை. இவ்வாறு ஓர் ஆண்டில் ஆறுகாலப்பூஜை செய்து நடராஜப் பெருமானை வழிபடுவது முறை.

திருவாதிரை விழாவில் நடராஜப்பெருமானுக்கு அபிஷேகம் செய்து ரட்சாபந்தனமாகிய காப்பு அணிவிப்பர். 'கிருஷ்ணகந்தம்' என்னும் கருநிறச் சாந்து தரிப்பர். வெள்ளைப் பட்டுச் சாத்துவர். களிசெய்து நிவேதிப்பர். இவை அனைத்தும் ஐந்தொழிலைக் குறிப்பனவாகும். அன்று பெருமானின் சந்நிதியில் ஒரு பசு நிறுத்தப்படும். இது இறைவனை நோக்கி நில்லாமல் பின்புறத்தைக் காட்டி நிறுத்தப்படும். பசு நிறுத்தப்படுவது இறைவன் மீண்டும் படைத்தல் தொழிலை மேற்கொள்வதைக் குறிக்கும்.

உலகியல் வாழ்வை விரும்பும் உயிர்கள் இறையருளில் நாட்டம் கொள்ளாததைக் குறிக்கவே நேராக நிறுத்தாமல் பின்புறம் காட்டி நிறுத்துகின்றனர். இங்கு வழங்கும் கருநிறச்சாந்து, சங்காரத்தை உணர்த்தும். அபிஷேகம், சிருஷ்டியைக் குறிக்கும். நைவேத்தியம் ஸ்திதி, கபிலப்பசு தரிசனம் திரோபவம், தீபாராதனை அனுக்கிரகம் ஆகியவற்றைக் குறிக்கும்.

அப்போது வழங்கப்படும் களி, அருள் உணவு. உயிர்களுக்கு இறைவன் தனு கரண புவன போகங்களைக் கொடுத்துக் களிப்பித்தலை இது அறிவிக்கும். இவ்வாறு அன்று நடக்கும் நிகழ்ச்சிகளுக்குப் பல நுட்பமான தத்துவங்கள் உண்டு. இவற்றை உணர்ந்து, திருவாதிரைத் திருநாளில் இறைவனை வழிபட்டு, அவனது இறையருளில் நனைந்து திளைத்து இன்புறுவோமாக. □



ராமாயணத்தில் ராமன் பெயர் உள்ளது. புனிதமான இந்தப் பெயர் புராணங்களின் சாரம்; நன்மையின் உறைவிடம்; தீமையை அழிப்பது. பார்வதியும் சிவபிரானும் இந்தப் பெயரை ஜபிக்கிறார்கள்.

—துளசி ராமாயணம்

சிவனுடைய தொடர்பால் மயானத்துச் சாம்பல் புனிதம் பெறுகிறது. அதுபோல், கலியின் பாவங்களை நீக்கும் ராமகதையின் தொடர்பால் கவிதை கங்கையாகிறது.

—துளசி ராமாயணம்



இறைவனது நாம மகிமை

த. காவேரி

ஓர் ஊரில் அமைதியான இடத்தில் ஓர் ஆலயம் இருந்தது. அந்தக் கோவிலில் திருவிழா நடைபெற்றது. பக்தர்கள் பலர் கூடி, பகவானது நாமத்தை ஜபம் செய்துகொண்டு இருந்தார்கள். அப்போது ஓர் இளைஞன் அவ் வழியே சென்றான். அவனுக்கு இவற்றில் நம்பிக்கை கிடையாது.

எனவே அவன், ''ஏன் இப்படிக் கூச்சல் போடுகிறார்கள்? இதனால் என்ன கிடைத்து விடும்?'' என்று பரிகசித்தான்.

இதனைக் கேட்ட ஒரு முதியவர், ''தம்பி! பகவானது திவ்ய நாமத்தைப் பழிக்காதே. பகவானைவிட அவரது திருநாமம் உயர்ந்தது. அதனால் ஆகாதது ஒன்றும் கிடையாது'' என்றார்.

இளைஞன் முதியவரிடம், ''பகவானது நாமத்தினால் ஆகாதது ஒன்றும் இல்லை என்கிறீர்களே! அவன் நாமம் சோறு போடுமா?'' என்று கேலியாகக் கேட்டான்.

முதியவர் உறுதியான குரலில், ''நீ பகவானது நாமத்தை நம்பிக்கையுடன் உச்சரித்தால் பகவானே உனக்குச் சோறு ஊட்டியும் விடுவார்'' என்றார்.

இளைஞன் இதனைச் சோதனை செய்ய விரும்பினான். அதற்காக அவன் அருகிலுள்ள காட்டிற்குச் சென்றான். ஏனென்றால் காட்டில் ஜன நடமாட்டம் இருக்காது. அது மட்டுமல்லாமல் ஒரு மரத்தின் மேல் ஏறி உட்கார்ந்துகொண்டான். கீழே தரையில் அமர்ந்திருந்தால் போவோர் வருவோர் இரக்கம் கொண்டு ஒருவேளை உணவுக்கு வழி செய்து விடுவார்கள் அல்லவா? இவ்வாறு ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் அவன் உட்கார்ந்து கொண்டான். 'இனி இறைவன் எப்படி உணவு தருகிறான் பார்க்கலாம்!' என எண்ணினான். ஆயினும் முதியவர் கூறியபடி, பகவானது நாமத்தை முழுமனதுடன் கூறினான்.

இரண்டு நாட்கள் சென்றன. ஒன்றும் நடக்கவில்லை. இளைஞன் நம்பிக்கையுடன் நாமத்தைக் கூறிக்கொண்டே இருந்தான். அன்று மதியம் அவ் வழியே ஒரு வழிப்போக்கன் வந்தான். அவன் காட்டுவழியே செல்வதனால் இரண்டு நாளைக்கு உரிய உணவைக் கட்டுச் சாதமாகக் கொண்டு வந்திருந்தான். இளைஞன் இருந்த மரநிழலில் அமர்ந்து அவன் மதிய

உணவு உண்டான். பின்பு சாதமூட்டையைத் தலைக்கு வைத்து உறங்கினான். மாலையில் எழுந்து கட்டுச்சாத மூட்டையை மறந்து நடந்தான். இளைஞன் இவற்றையெல்லாம் கவனிக்காமல் இறைவனது நாமத்தை உச்சரித்துக்கொண்டிருந்தான்.

அந்தக் காட்டில் பல நாட்களாக ஒரு கள்வர் கூட்டம் இருந்தது. பக்கத்து ஊர்க்காரர்கள் பல முயற்சிகள் செய்தும் அவர்களைப் பிடிக்க முடியவில்லை. வழிபோக்கன் சாதமூட்டையை வைத்துவிட்டுச் சென்ற அன்றைக்குக் கள்வர்கள் தாங்கள் கொள்ளையடித்த பொருளுடன் அதே மரத்தடிக்கு வந்தார்கள். அவர்கள் அந்தச் சாமான்களைப் பங்கிட ஆரம்பித்தார்கள்.

அப்போது அவர்களுள் ஒருவன் சாதமூட்டையைக் கண்டான். அனைவருக்கும் பசியாக இருந்ததனால் முதலில் அதைச் சாப்பிட எண்ணினர். ஆனால் அவர்களின் தலைவன், "நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இது நம்மைக் கொல்ல ஊரார் வைத்த விஷ உணவாக இருக்கலாம்" என்றான்.

சுற்று முற்றும் தேடிய கள்வர்கள் மரத்தின் மேலிருந்த இளைஞனைக் கண்டனர். அவனே உணவை வைத்தவன் என்று எண்ணி அவனை மிரட்டினார்கள். அவன் ஒன்றும் புரியாமல் விழித்தான்.

கள்வர்தலைவன், "எனக்குச் சந்தேகமாக உள்ளது. முதலில் இவனையே சாப்பிடச் சொல்லுங்கள்" என்றான்.

இளைஞனோ சாப்பிட மறுத்தான். இது அவர்களது சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியது. கள்வர்தலைவன், "நம்மைக் கொல்லவே இந்த உணவை இவன் வைத்திருக்க வேண்டும். இவனைப் பிடித்து உணவை வாயில் ஊட்டுங்கள்" என்றான் கோபத்தோடு. கள்வரும் அவ்வாறே செய்தனர்.

இதனைக் கண்ட இளைஞன் முதியவர் கூறியபடியே அனைத்தும் நடப்பதைக் கண்டு பகவானது திருவருளை நினைந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான். அந்தக் கணமே அவனுக்குப் பகவானது எல்லையில்லாத மகிமைகள் தெரியலாயின். ○

கருமத்தில் கண்ணாக இருப்பதே பிரார்த்தனைதான். துயரடைந்தவர்களுக்குத் தொண்டு செய்வதிலேயே பிரார்த்தனை முழுமை அடைகிறது. —காந்தியடிகள்

போதனை, படிப்பு, தியானம் முதலிய எல்லாவற்றையும்விட, குருகிருபை மிகவும் அவசியம். அதனாலேயே சாட்சாத்காரம் சித்திக்கும். மற்றவை எல்லாம் ஒருவாறு உதவும், இரண்டாந்தரம். குருகிருபையே சாட்சாத்காரத்திற்கு உரிய நேரான முக்கிய வழியாகும். —ரமண மகரிஷி

வேதாந்தச் சிந்தனை

சுவாமி விவேகானந்தர்

ஒவ்வோர் இன்பத்திற்குப் பின் துன்பம் வருகிறது. அது விரைந்தும் வரலாம்; காலம் தாழ்ந்தும் வரலாம். பரிபக்குவம் அடைந்த ஆன்மாவாக இருப்பின் இன்பத்தைத் தொடர்ந்து உடனே துன்பம் வந்துவிடுகிறது. நாம் வேண்டுவது இன்பமும் அன்று; துன்பமும் அன்று. இவை இரண்டும் நமது உண்மை இயல்பை மறக்கும்படி செய்கின்றன. இவை இரண்டும் விலங்குகளே யாகும். ஒன்று இரும்பு விலங்கு; மற்றென்று பொன் விலங்கு. இன்பம் துன்பம் இரண்டையும் அறியாத ஆன்மா அதன் பின்புலத்தில் இருக்கிறது. இவை அவஸ்தைகள். அவஸ்தைகள் எப்பொழுதும் மாறியாக வேண்டும். ஆனால் ஆத்மாவின் இயல்பு, மாற்றம் அடையாத ஆனந்தம் ஆகும்; அமைதியாகும். எங்கிருந்தோ அதை அடைய வேண்டுவது இல்லை. நம்மிடமே அது உள்ளது. படிந்திருக்கும் மாசுகளை நாம் கழுவிவிட்டால், பிறகு ஆத்மாவை நாம் காண முடியும். ஆன்மிக அனுபவத்தில் நிலைத்து இருப்பாயாக. அப்பொழுதுதான் உலகத்தை நேசிக்க முடியும். எப்பொழுதும் மகோன்னத நிலையிலேயே இருப்பாயாக.

மனதை முழுதும் அமைதியாக வைத்துக் கொண்டு, உலகில் தொடர்ந்து நடைபெறும் காட்சிகளை நோக்குக. இந்த உலக நிகழ்ச்சிகள் ஒரு குழந்தை விளையாட்டு என்பதைத் தெரிந்து கொண்டுள்ள நாம் பிறகு அதனால் கலக்கம் அடைவது இல்லை. புகழ்ச்சியால் இன்பம் அடைகிற மனம், இகழ்ச்சியில் துன்பம் அடையும். ஐம்புலன்களால் அடையும் இன்பங்களும் மனதினில் துய்க்கும் இன்பங்களும் நிலையற்றவை. ஆயினும் நமக்குள்ளே உண்மையான ஓர் இன்பநிலை உள்ளது. அது எதனோடும் தொடர்பு இன்றி இருப்பது; முற்றும் சுயேச்சையானது; பேரானந்தமயமானது. உள்ளத்துள்ளே அந்த ஆனந்தத்தை அனுபவிக்க, பரமார்த்த சுகத்தில் நாம் முன்னேற்றம் அடைகிறோம்.

புறத்திலே நாம் காணும் பிரபஞ்சத்தை விட, அகத்திலே நாம் காணும் பிரபஞ்சம் உண்மையானது; அளவற்றது; மகத்தானது; பந்தத்தை விட்டு ஒழித்து, இறைவன் புதல்வன் ஆகி, சுதந்திரம் அடை. அளவற்ற பலமே இறைநிலை; அதுவே சமயநிலை. அடிமைத்தனத்தையும் பலவீனத்தையும் தவிர்த்துவிடு. நீ சுதந்தரமாய் இருக்கும்போதுதான் நீ ஆத்மன் ஆகிறாய்; நீ சுதந்தரமாய் இருக்கும்போது தான் அமர நிலையை அடைகிறாய். சுதந்தரமாய் இருப்பவனே இறைவனாகிறான்.


உலகம் எனக்காக உள்ளது; உலகத்துக்காக நான் இல்லை. நன்மையும் தீமையும் நமது அடிமைகள்; நாம் அவற்றுக்கு அடிமை அல்லோம். முன்னேற்றத்தில் நாட்டம் இன்றி, இருந்த இருப்பிலேயே இருப்பது விலங்கின் இயல்பு. நன்மையை நாடுவதும் தீமையைத் தவிர்ப்பதும் மனித இயல்பு. இறைவனுடைய இயல்பு இந்த இரண்டிலும் நாட்டம் இன்றி நித்தியமாய் ஆனந்தமயமாய் இருப்பது. நாமும் இறைவனைப் போல் இருப்போமாக. இதயத்தைக் கடல்போல விசாலம் ஆக்கிக்கொள். உலகில் காணப்படும் சிறுமைகள் அனைத்தையும் கடந்து அப்பால் செல். தீமையைக் காண நேரினும் பேரானந்தப் பைத்தியம் உனக்கு ஏற்படட்டும். ஓர் ஓவியத்தைப் பார்ப்பது போல், உலகத்தை நோக்கி, அதில் காணப்படும் எழிலை அனுபவித்து மகிழ். உன்னை எதுவும் பாதிக்காது என்பதைத் தெரிந்து கொள். நன்மை எது என்பதை நீ அறிவாயா? சேற்றுக் குழியில் பாசிமணியைக் குழந்தைகள் கண்டு களிப்பதற்கு ஒப்பானது இந்த உலகம். எதிலும் பற்றுக்கொள்ளாது, இந்த உலகத்தை நோக்கு. நன்மை தீமை இரண்டும் ஒன்றே என்பதையும், அவை

இறைவனின் திருவிளையாடல்கள் என்பதையும் நீ தெரிந்துகொள். அனைத்தையும் பார்க்கும்போது மகிழ்ச்சி அடை.

எதையும் தேடிச் செல்லாதே; வேண்டாம் என்று விலக்கியும் தள்ளாதே. வருவதை அப்படி அப்படியே ஏற்றுக்கொள். எதனாலும் பாதிக்கப்படாமல் இருப்பதே சுதந்திரம் ஆகும். பொறுத்துக்கொள்வது மட்டும் போதாது; பற்றற்று இருப்பது அவசியம். ஒரு காளையின் கொம்பின் மீது, கொசு ஒன்று வந்து நீண்ட நேரம் உட்கார்ந்திருந்தது. அப்படித் தான் உட்கார்ந்து இருப்பது, கொசுவுக்கு ஏதோ மனதை உறுத்தியது. ஆகவே அது காளையை நோக்கி, ''காளையாரே! நீண்ட நேரமாக உம்மீது நான் உட்கார்ந்து இருக்கிறேன். ஒருவேளை இது உமக்குச் சிரமமாய் இருக்கக் கூடும். அதற்காக நான் வருந்துகிறேன். சரி, நான் போய்விடுகிறேன்'' என்று கூறிற்று. அதைக் கேட்ட காளை, ''நீ போக வேண்டாம். உனது குடும்பம் முழுவதையுமே அழைத்து வந்து எனது கொம்புகள்மீது அமரச் செய். உன்னால் எனக்கு என்ன தீங்கு விளைவிக்க முடியும்? ஒன்றும் இல்லை'' என்று பதில் சொல்லிற்று.

'நான் செய்கிறேன்' என்ற அகந்தை உணர்வு சிறிதும் இல்லாமல் நாம் செய்யும் காரியங்கள் சிறந்தனவாக அமைகின்றன. தெய்விக நடிகராகிய இறைவனிடம் நம்மை முழுதும் ஒப்படைத்துவிடுவோம். அவர் நடிக்கட்டும்; நாம் எதுவும் செய்யாமல் சும்மா இருப்போம். ''அர்ஜுனா! நான் செய்யக் கூடிய கடமை உலகில் எதுவும் இல்லை'' என்று பகவத்கீதையில் பகவான் கிருஷ்ணர் கூறுகிறார். முற்றும் கவலையற்ற நிலையிலும் பற்றற்ற நிலையிலும் இரு. அப்பொழுதுதான் செய்யும் காரியங்களை உண்மையாக நீ செய்ய முடியும். நமது செயலுக்குப் பின்னே இருந்து இயக்கும் சக்தியை நேரில் நம்மால் காண முடியாது. அதன் விளைவுகளை மட்டுமே நாம் காண முடியும். 'நான்' என்பதை ஒழித்துவிடு; இறந்துவிடு; மறந்துவிடு. இறைவன் அவனுடைய காரியங்களைச் செய்துகொள்ளட்டும்; இது அவனுடைய கடமை. ஒதுங்கி இருப்பதைத் தவிர, வேறு வேலை எதுவும் நமக்கு இல்லை. இறைவனது செயல் நிகழட்டும். எந்த அளவுக்கு நாம் விலகி இருக்கிறோமோ, அந்த அளவுக்கு இறைவன் நம் இதயத்தில் வாசம் செய்கிறான். நான் என்ற சிறிய அகந்தையை விட்டுவிடு; நான் என்ற பெரிய கடவுள் மட்டும் வாழ இடம் கொடுப்பாயாக.

நமது எண்ணங்களுக்கு இயைய நாம் உருவாகிறோம். ஆகவே எண்ணுவது குறித்து எச்சரிக்கையாய் இரு. சொற்கள் அவ்வளவு முக்கியமானவை அல்ல. எண்ணங்களே வாழ்கின்றன. நெடும் தூரம்வரை அவை செல்லுகின்றன. ஒவ்வோர் எண்ணத்திலும் நமது இயல்பு படிந்திருக்கிறது. ஆகவே சான்றோர் ஒருவரின் வேடிக்கைப் பேச்சும் வைதலும்கூட, அவருடைய தூய அன்பிலிருந்து தோன்றியவை ஆகும். அவை நிச்சயம் நன்மை பயக்கும்.



எதிலும் ஆசை கொள்ளாதே; இறைவனை நினை; கைம்மாறு கருதாதே; ஆசையின்றிச் செய்யும் செயல்களே தகுந்த பலனை அளிக்கின்றன. பிச்சை ஏற்று வாழும் துறவிகளே வீடுதோறும் சென்று சமயத்தைப் பரப்புகின்றனர்; எதையும் சாதித்துவிட்டதாக அவர்கள் எண்ணுவதும் இல்லை; அதன் பொருட்டு அவர்கள் உரிமை கொண்டாடுவதுமில்லை. தங்களை அறியாமலே, தாங்கள் செய்ய வேண்டியதை அவர்கள் செய்கின்றனர். நான் என்னும் அகங்காரம் தலையெடுக்கும்போதெல்லாம் நம்மை நாமே ஏமாற்றிக்

கொள்கிறோம். தன்னைத் தானே மறைத்துக் கொண்டு இறைவனின் காரியங்களைச் செய்பவனே மேலான காரியங்களைச் செய்கிறான். உன்னை நீயே கட்டுப்படுத்திக் கொள்வதில் வெற்றி காண்பாயாயின், உலகத்தையே நீ வெற்றி கொள்ளலாம்.

சத்துவ நிலையில் இருக்கும்போது பொருள்களின் இருப்பை உள்ளது உள்ளபடி காண்கிறோம். எதையும் பற்றிக் குறிப்பிட நேரும்போது, "நான் இதைச் செய்தேன்; அதைச் செய்தேன்; ஏனையவற்றைச் செய்தேன்" என்று, 'நான்' என்பதை முன் நிறுத்தி நாம் குறிப்பிடுகிறோம். 'நான்' என்னும் அற்ப எண்ணத்தை விட்டு விடுங்கள். "செய்பவன் நான் அல்ல; இறைவனே" என்று சொல்லுங்கள். அதை உணர்ந்து அதன்படி வாழ்க்கை நடத்துங்கள். அகங்காரத்தால் உற்பத்தி செய்து கொண்ட உலகை நாம் விட்டுவிடாதவரை, விண்ணுலகப் பேற்றை அடைந்ததும் இல்லை; அடையப் போவதும் இல்லை. உலகைத் துறப்பது என்பது அகங்காரத்தை மறப்பது ஆகும்; உலக நினைப்பு இல்லாது இருப்பதேயாகும்; உடலில் வாழ்ந்து கொண்டே உடல் நினைப்பு இல்லாது வாழ்வது ஆகும். அகங்காரம் என்னும் போக்கிரியை இல்லாது ஒழித்துவிட வேண்டும். உன்னை இகழும் மக்களை நீ வாழ்த்து; அவர்கள் உனக்கு நன்மை செய்வதாக நினைத்துக்கொள். உனக்குத் தீங்கு செய்வோர் தங்களுக்குத் தாங்களே தீங்கு விளைவித்துக் கொள்கிறார்கள். உன்னை வெறுக்கும் மக்களிடம் நீ செல். நான் என்னும் அகந்தை உன்னிடம் இருப்பதை அவர்கள் அடித்துத் துரத்தட்டும். அது உன்னை இறைவனுக்கு அருகே அழைத்துச் செல்லும்.

போகம் என்பது கோடிக்கணக்கான தலைகளைக் கொண்ட ஒரு பாம்பு. அதை நமது கால்களால் மிதித்துத் தள்ள வேண்டும்.

ஐம்புலன் மூலம் நாம் அனுபவிக்கும் இன்பம் அனைத்தும் உலோகாயதம் ஆகும். உண்மை இன்பம் அதில் இம்மி அளவுகூட இல்லை. இன்பம் என்று அப்படி நாம் அனுபவிப்பது எல்லாம் பேரானந்தத்தின் நிழலேயாகும். இறைவனிடம் தங்களை ஒப்படைத்துக் கொண்டவர்கள், தொண்டர்களைக்காட்டிலும் பன்மடங்கு அதிகமாகத் தொண்டு புரிகின்றனர். ஒரு படையின் அளவு எண்ணிக்கையுள்ள மதப்பிரசாரகர்கள் சாதிக்க முடிவதைக் காட்டிலும் தன்னை முழுவதும் தூய்மைப்படுத்திக் கொண்டவன் அதிகம் சாதிக்கிறான். தூய்மையினின்றும் மௌனத்தினின்றும் பிறக்கும் சொற்களுக்கு அதிக ஆற்றல் உண்டு.

நிறைவாக இருக்கும் பரம்பொருள் எக்காலத்திலும் அந்த நிறை நிலையிலிருந்து குறைவதில்லை. இருளின் நடுவிலே இருந்தபோதிலும், பரம்பொருளை இருள் பாதிப்பதில்லை. இறைவனுடைய கருணை எல்லாருக்கும் கிட்டுகிறது; மனிதன் செய்யும் கொடுமைகளால் அது தடைப்படுவதில்லை. நோயால் பீடிக்கப்பட்ட கண்கள், சூரியனைத் திரிவுபடுத்திக் காட்டக் கூடும். ஆனால், சூரியனுக்கு அதனால் எவ்வித பாதிப்பும் ஏற்படுவது இல்லை.

சொல்லால் விளக்க முடியாத, விவரிக்க முடியாத அன்பின் சாரமாக இருப்பவன் இறைவன். அவன் காட்டும் இந்த அன்பை உணர முடியுமேயல்லாது, விளக்க முடியாது.

நாம் நடத்தும் போராட்டங்களாலும் அனுபவிக்கும் துன்பங்களாலும் இந்த உலகம் பயங்கரமானதாக நமக்குத் தோன்றுகிறது. ஆனால் இரு நாய்க்குட்டிகள் ஒன்றை ஒன்று கடித்துக்கொண்டும் விளையாடிக்கொண்டும் இருப்பதைக் கவனிக்கும்போது, அது குறித்து நாம் சிறிதும் கவலைகொள்வதில்லை. ஏனெனில் அது ஒரு விளையாட்டு என்பதையும் இடையிடையே காயப்படும்படி அவை கடித்துக் கொண்டாலும் அதனால் தீங்கு விளையாது என்பதையும் நாம் நன்கு அறிவோம். இதைப் போலவே, நமது போராட்டங்கள் அனைத்தும் இறைவன் கண்களுக்கு ஒரு விளையாட்டே ஆகும். இந்த உலகம் விளையாட்டுக்களுக்காகவே அமைந்திருப்பதனால், அவற்றைக் காணும் இறைவன் மகிழ்ச்சி அடைகிறான். எதற்காகவும் இறைவன் கோபம் கொள்வதில்லை.

○

திருவாசகம்

என். கிரிதாரி பிரசாத்

உலகில் தோன்றிய நூல்கள் எண்ணிறந்தவை. அவற்றுள் சில நூல்களே தனிப் பெருமை உடையன.

மனிதனுக்கு மனிதன் சொன்னது திருக்குறள். இது அறம் பொருள் இன்பம் என்னும் பொருள்களைப்பற்றி நுதல்வது. ஒழுக்க நெறிக்கு இன்றியமையாத தனிப் பெருநூல்.

இதே போல் வடநாட்டில் ஒரு நூலுக்குத் தனிச் சிறப்பு உண்டு. அதுதான் பகவத் கீதை. பரம்பொருளாகிய பகவான் சொல்ல, அடியானுகிய அர்ஜுனன் கேட்டது. இந்த நூல் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால்களுக்கு அப்பாலுள்ள வீட்டைப்பற்றிப் பேசுவது.



மனிதன் மனிதனுக்குச் சொன்னது திருக்குறள். கடவுள் மனிதனுக்குச் சொன்னது கீதை. ஆனுல் அறிவால சிவனுகிய மாணிக்க வாசகர் சொல்ல, ஆண்டவனுகிய அழகிய திருச்சிற்றம்பலமுடையான் கேட்டது திருவாசகம்.

1900-ஆம் ஆண்டிலேயே முழுவதும் ஆங்கிலத்தில் இந்த அழகிய நூலை மொழிபெயர்த்தவர் ஜி. யூ. போப் என்னும் ஆங்கிலப் பாதிரியார். அவர் தம் முகவுரையில் கூறியது :

"South India wanted a Personal God—a call to Prayer—an assurance of immortality and all the three were expressed in Thiruvachagam."

திருவாசகம் என்பது மனிதனுடைய ஆன்ம யாத்திரையை விளக்கும் ஓர் அரிய நூல். இன்ப துன்பங்களுக்கு வயப்பட்ட ஆன்மா விழுவதும் எழுவதும் அழுவதும் தொழுவதுமாக இடர்ப்படுகிறது. அங்கலாய்த்து அல்லலுறுகிறது. இல்வாழ்க்கையின் யாத்திரை மூன்று நிலைகளில் நடைபெறுகிறது. துன்பமும் அவலமும் கலந்த இருள்நிலை. இதனை, 'Pergation' என்பர் ஆங்கில அறிஞர். இந்த நிலையில் அது :

இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே
காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில்
வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி
எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள்வதில்லை
கண்டேனே.
—கண்டபத்து

இந்த நிலை மாறி ஆன்மாவைப் பற்றிய அந்தகாரம் அகன்று ஒளிபெறும் நிலை; இதனை Enlightenment என்பர். இந்த நிலையில் துன்பமும் அவலமும் நீங்க நம்பிக்கையுடன் ஆன்மா இறைவனைக் கூவுகிறது.

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய்
வந்தென் மனத்திடை மன்னிய மன்னே

சிறைபெரு நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீ என் உடல் இடம்
கொண்டாய் இனி உன்னை என்
இரக்கேனே. (22-5)

இந்த ஒளிநிலையையும் கடந்து ஆன்மா தன் முடிந்த நிலையாகிய unity—ஆண்டவனுடன் இரண்டறக் கலக்கும் பெருநிலையாகிய அருள் நிலையை எய்துகிறது. இந்த நிலையுடன் ஆன்ம யாத்திரை முடிந்துவிடுகிறது.

Purgation என்ற இருள்நிலையைக் கடந்து ஆன்மா Enlightenment என்னும் தெருள் நிலையை அடைந்து, இறுதியாக unity என்னும் அருள்நிலையை எய்துகிறது. இந்த இருளும் தெருளும் அருளும்தான் திருவாசகம் காட்டும் சிறந்த நெறிகளாகத் திகழ்கின்றன.

திருவாசகத்தின் திறவுகோல் எங்கே இருக்கிறது? 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பது ஆன்றோர் வாக்கு.

'அழுதால் உன்னைப் பெறலாமே' என்பது தான் திருவாசகம் நுதலும் பொருள்.

இறைவனை அடைய எத்தனையோ வழிகள் உள்ளன. பக்தி, ஞானம், கர்மம் என்றெல்லாம் அறிஞர் கூறுவர். இவை அனைத்தின் சாரமாகத் திகழ்வதுதான் மாணிக்கவாசகர் காட்டும் நெறி. இறைவனை மெய்ப்பாடு படர, கண்களில் நீர் பெருக, உள்ளம் குழைய, உணர்வுடன் உள்ளம் உருகிப் போற்ற வேண்டும். அழுதால் அவனைப் பெறலாம். இதற்கு மந்திரமும் தந்திரமும் தேவையில்லை. மனக் குழைவுதான் தேவை.

ஆனால் அழுவதுதான் எப்படி? எல்லாவற்றையும் மறந்த நிலையிலே இறைவனையே பற்றுக்கோடாகக் கொண்டு, அடைக்கல உணர்வுடன் அன்பு மீதூர அழ வேண்டும்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி இறைவனை நினைந்து அழுதால் அவனைப் பெறலாம் என்று கூறும் திருவாசகப் பாடல்களை வாயெல்லாம் தித்திக்க, மனமெல்லாம் தித்திக்க, மதி எல்லாம் தித்திக்க, மன்னிய அறிவெல்லாம் தித்திக்க மகிழ்ந்து பாடுவோம். அழுது அழுதே அவனை அடைவோம். □

ஆத்மஞானமின்றி இந்த உலகில் மனிதன் எதைச் செய்தாலும், அது ஒன்றுக்கும் உதவாத மணல்வெளியை உழுது பயிர் செய்வது போல முடிவில் பயனற்றதாகும்.

—சூர்ய கீதை

செய்திகள்

□ அக்டோபர் 10-ஆம் நாள் ஆர்க்காடு ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயத்தில் டாக்டர் பாஸ்கர் தலைமையில் பத்து மருத்துவர்களால் மருத்துவ முகாம் நடத்தப்பெற்றது. 500க்கு மேற்பட்டவர்களுக்கு மருத்துவம் செய்யப்பட்டு மருந்துகளும் டானிக்குகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

□ 10-10-81ஆம் நாள் ஆர்க்காடு ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயா மாணவர்களுக்கு ஒழுக்கப் பயிற்சி முறை துவக்கப்பெற்றது. நிகழ்ச்சியைத் துவக்கி வைத்து சுவாமி சம்பிரக்ஞானந்தர் தலைமையுரை ஆற்றினார். குழந்தைகள் நாள்தோறும் வீட்டில் வைத்து வழிபடுவதற்கு, பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவுருவப் படங்கள் வழங்கப்பட்டன.

□ சகோதரி நிவேதிதா அகாடமியின் சார்பாக 31-10-81ஆம் நாள் மாலை 6-30 மணிக்கு, சென்னை பாரதீய வித்யா பவனில் கருத்தரங்கம் நடைபெற்றது. 'விவேகானந்தர் அளித்த செய்தி' என்ற தலைப்பில் சுவாமி கமலாத்மானந்தர் உரையாற்றினார்.

□ வேலூர் ஸ்ரீ ராமகிருஷ்ண—விவேகானந்த மன்றத்தின் சார்பாக, தோப்பா சுவாமி மடத்தில் 1-11-81ஆம் நாள் சுவாமி கமலாத்மானந்தரால் அந்தர்யோகம் நடத்தப்பெற்றது.

அருள்நெறிக் கதை:

மகான் ரைதாஸ்

நாடோடி

காசியில் ரைதாஸ் என்னும் ஒரு பக்தர் இருந்தார். அவர் ஜாதியில் சக்கிலியர். ஆகவே கங்கைக்குச் செல்லும் தெருவின் ஓரத்தில் உட்கார்ந்து செருப்புக்களைத் தைப்பது, அதனால் கிடைக்கும் வருவாயைக் கொண்டு திருப்தியுடன் வாழ்க்கையை நடத்துவது என்று இருந்தார்.

ஒரு நாள் கிரகண தினம். எல்லோரும் அன்று கங்கையில் ஸ்நானம் செய்தால் புண்ணியம் கிடைக்கும் என்று கங்கையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள். ஆனால் ரைதாஸ் தாம் வழக்கமாக உட்காரும் இடத்தில் உட்கார்ந்து தம் வேலையைக் கவனித்துக்கொண்டிருந்தார்.

அப்பொழுது அந்த வழியாகக் கங்கையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஓர் அந்தணரின் செருப்பு, சடாரென அறுந்துவிட்டது. அந்தச் செருப்பை அவர் ரைதாஸிடம் கொடுத்துத் தைக்கச் சொன்னார்.

''கொஞ்சம் பொறுங்கள். கையிலுள்ள இந்தச் செருப்பைத் தைத்து முடித்துவிட்டு உங்கள் செருப்பை எடுத்துக்கொள்கிறேன்'' என்றார் ரைதாஸ்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அந்தச் செருப்பைத் தைத்து முடித்தாகிவிட்டது. ஆகவே ரைதாஸ் அந்தணரின் செருப்பை எடுத்துக் கொண்டு அதைத் தைக்க ஆரம்பித்தார். அப்பொழுது அந்தணர் ரைதாஸோடு பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தார்.

''ஏனப்பா, இன்று கிரகண தினம். இன்று கங்கையில் ஸ்நானம் செய்தால் நிறையப் புண்ணியம் கிடைக்கும். அதற்காக நான் இருபது மைல் தொலைவிலிருந்து வருகிறேன். நீ என்னடா என்றால் கங்கைக்கு இத்தனை சமீபத்தில் உட்கார்ந்துகொண்டு அதில் ஸ்நானம் பண்ணச் செல்லாமலிருக்கிறாயே?'' என்று கேட்டார்.

ரைதாஸ் சொன்னார்: ''ஐயா, நான் ஏழை. கங்கையில் ஸ்நானம் செய்தால் என் வயிறு எப்படி நிரம்பும்? என் குழந்தைகளுக்கு யார் சாப்பாடு போடுவார்கள்?''

''உன்னைப் போன்ற அசடனை நான் இப்பொழுதுதானப்பா பார்க்கிறேன்'' என்றார் அந்தணர்.

இதற்குள் செருப்புத் தைத்து முடிந்து விட்டதனால் அதை ரைதாஸ் அந்தணர்முன் வைத்தார். அந்தணர் செருப்பை மாட்டிக் கொண்டு ரைதாஸுக்கு அரையணா கூலியாகக் கொடுத்தார்.

ரைதாஸ் அந்த அரையணாவை எடுத்துக் கொள்ளவில்லை. ''இதை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் அதற்குப் பதில் எனக்கு ஓர் உதவி செய்யுங்கள்'' என்றார்.

''என்ன?''

ரைதாஸ் தம் பையிலிருந்து சில பாக்குகளை எடுத்தார். ''இந்தப் பாக்குகளை நான் கங்கையம்மனுக்குக் காணிக்கையாகக் கொடுத்ததாகச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அவள் கையை நீட்டினால்தான் கொடுக்க வேண்டும். தண்ணீரில் தூக்கி எறிந்துவிட்டு வரக்கூடாது'' என்றார்.


'கங்கையம்மன் வந்து கையை நீட்டி வாங்கிக்கொள்வதாவது!' என்று நினைத்துக் கொண்டு அந்தணர் பாக்கை வாங்கி ஒரு பையில் வைத்துக்கொண்டு கங்கையை நோக்கிச் சென்றார்.

கங்கையில் ஸ்நானம் செய்து தம் அனுஷ்டானங்களை முடித்தார். பிறகுதான் அவருக்கு ரைதாஸ் கொடுத்த பாக்கு ஞாபகத்துக்கு வந்தது. முதலில் பாக்கைத் தண்ணீரில் தூக்கி எறியலாமா என்று நினைத்தார். கடைசியில் கங்கைக் கரையில் நின்று கொண்டு நம்பிக்கை இல்லாமலே, ''இந்

தாம்மா கங்கா, அந்தச் சக்கிலி உனக்கென்று அனுப்பியுள்ள பாக்குகள்'' என்று சொன்னார்.

என்ன ஆச்சரியம்! தண்ணீரிலிருந்து ஓர் அழகிய கை வெளியே வந்தது; அந்தப் பாக்குகளை வாங்கிக்கொண்டு தண்ணீரில் அமிழ்ந்தது. அடுத்த கணமே அந்தக் கை மீண்டும் தண்ணீருக்கு மேலே வந்தது. அதில் ஓர் அழகிய தங்க வளையல் இருந்தது. அந்த வளையலில் அழகிய கற்கள் பதிக்கப் பட்டிருந்தன.

கங்கையின் தண்ணீருக்குள்ளிருந்து ஒரு சப்தம் கேட்டது. ''ரைதாஸிடம் நான் அவர் கொடுத்த பாக்குகளைப் பெற்றுக்கொண்டு விட்டேன் என்றும், அதற்குப் பதிலாக இந்த வளையலைக் கொடுத்திருக்கிறேன் என்றும் சொல்லி, வளையலை அவரிடம் கொடுக்கவும்.''



ஆனால் அந்த அழகிய வளையலைக் கண்டதும் அந்தணருக்கு அதை ரைதாஸிடம் கொடுக்க மனமில்லை. வீட்டிற்குச் சென்று தம் மனைவியிடம் அந்த வளையலைக் காண்பித்தார். அது எப்படிக் கிடைத்தது என்றும் சொன்னார்.

''இதை அரசனிடம் கொண்டுபோய்க் கொடுங்கள். அவன் நிறையப் பணம் கொடுப்பான். அதைக் கொண்டு நாம் நிம்மதியாக வாழலாம்'' என்று அவள் சொன்னாள்.

அந்தணர் வளையலை எடுத்துக்கொண்டு போய் அரசனிடம் காண்பித்தார். அதைக் கண்டதும் அரசன் அதன் அழகில் மயங்கி அந்தணருக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்து,

ஒழுக்கம் கெட்டவர்களுக்கு எப்படிப்பட்ட சூழ்நிலை வந்தாலும் பழைய நல்ல பெயர் வருவதில்லை.

—எடிஸன்

கடவுள் மனிதனை அளவெடுக்கும்போது தலையின் சுற்றளவைப் பார்ப்பதில்லை. இதயத்தின் அளவைத்தான் பார்க்கிறார்.

—வால் கோல்டு

அந்த வளையலைத் தான் வாங்கிக்கொண்டு போய் ராணியிடம் கொடுத்தான்.

அந்த அழகிய வளையலைக் கண்டதும் ராணிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி சொல்லி முடியாது. அவள் அந்த வளையலை ஒரு கையில் போட்டுக்கொண்டாள்.

ராணியின் கையில் வளையலைப் பார்த்த எல்லோரும் அதைப் பாராட்டியதோடு, ''இதன் ஜோடி வளையல் எங்கே? அதுவும் இருந்தால் அல்லவோ பார்க்க அழகாக இருக்கும்?'' என்று சொல்ல ஆரம்பித்தார்கள். ஆகவே ராணி அரசனைப் பார்த்துத் தனக்கு அந்த வளையலின் ஜோடி வேண்டும் என்று கேட்டாள்.

உடனே அரசன் அந்த அந்தணருக்கு ஆள் அனுப்பி வைத்தான். அந்தணர் வந்ததும், ''இந்த வளையல் ஜோடியின் மற்ற ஒரு வளையலையும் கொண்டு வந்து கொடு, இல்லையேல் உன்னைத் தண்டிப்பேன்'' என்று சொன்னான்.

நடந்த கதையை அந்தணர் சொன்னார்; ஆனால் அரசன் அதை நம்பத் தயாராக இல்லை. ''உடனே அந்த வளையலையும் கொண்டு வந்து கொடு. இல்லையேல் உன்னைச் சிறைக்கு அனுப்புவேன்'' என்றான்.

வேறு வழியின்றி அந்தணர் ரைதாஸிடம் சென்று, அரசன் கொடுத்த பணத்தை அவர் முன்னால் வைத்து, நடந்த விஷயத்தைச் சொல்லி, ''இத்தனை பணத்தையும் நீயே வைத்துக்கொள். தயவுசெய்து கங்கை

யம்மனிடம் சென்று இன்னொரு வளையலையும் வாங்கிக் கொண்டுவந்து கொடு. இல்லையேல் நான் சிறைசெல்ல வேண்டி வரும்'' என்று அழுதார்.

ரைதாஸ், ''ஐயா, இந்தப் பணம் எனக்கு வேண்டாம். இதை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். பகவான் எனக்குத் தினம் அளிக்கும் கூலி போதும். அதைக் கொண்டு நான் திருப்தியாக இருக்கிறேன். தவிர, கங்கைக்குச் சென்று அம்மனைக் கேட்க எனக்கு ஏது ஒழிவு? என் வேலைதான் எனக்குச் சரியாக இருக்கிறது'' என்றார்.

ஆனால் அந்தணர் அழ ஆரம்பித்து விட்டார். ''எனக்கு எப்படியாவது இன்னொரு வளையலை வாங்கிக் கொடுத்துத்தான் ஆக வேண்டும்'' என்று ரைதாஸைக் கெஞ்ச ஆரம்பித்துவிட்டார்.

''சரி, கவலைப்படாதீர்கள். நல்ல மனது இருந்தால் கங்கை நம் வீட்டுப் புழைக்கடையிலும் இருப்பாள்'' என்று சொல்லிவிட்டு, தம் தோல்பையை ஒரு துணிகொண்டு மூடி, ''கங்கையம்மா! நீ இந்த அந்தணருக்கு உதவி செய்யத்தான் வேண்டும்'' என்று சொல்லித் துணியை எடுத்தார். பையில் அந்தப் பழைய வளையலின் ஜோடி இருந்தது.

''இந்த வளையலைக் கொண்டுபோய் அரசனிடம் கொடுங்கள்'' என்று கூறி, வளையலை அந்தணரிடம் கொடுத்தார் ரைதாஸ்.

அந்தணர் ரைதாஸின் காலில் விழுந்து தம் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார். அந்த ஆயிரம் ரூபாயை அவர்தாம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று எவ்வளவோ மன்றாடினார்.

''எனக்குப் பகவான் தினம் அளக்கும் படியே போதும். அதைக் கொண்டு நான் திருப்தியாக இருக்கிறேன்'' என்றார் ரைதாஸ். □

செய்திகள்

□ வேலூர் ஹிந்து இளைஞர் சங்கம் 1-11-81 ஆம் நாள் 'ஹிந்து இளைஞர்களின் எழுச்சி மாநாடு' நடத்தியது. அம் மாநாட்டில் இரவு 8 மணி முதல் 9-30 வரை 'வீறு கொண்ட ஹிந்துமதமும் ஹிந்துக்களின் கடமையும்' என்ற தலைப்பில் சுவாமி கமலாத்மானந்தர் சொற்பொழிவாற்றினார்.

□ வேலூர் தோப்பா சுவாமி மடத்தின் தலைவர் தவத்திரு மகாநாராயண சுவாமி அவர்கள் 3-11-81 ஆம் நாள் மாலை 5-30 மணிக்கு, சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் 'கைவல்ய நவநீதம்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

வடஆர்க்காடு மாவட்ட ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த இளைஞர் மாநாடு

□ வேலூரில், வடஆர்க்காடு மாவட்ட ஸ்ரீராமகிருஷ்ண—விவேகானந்த இளைஞர் மாநாடு 1982 ஜனவரி 3-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருக்கிறது. மாநாடு பற்றிய விவரங்களுக்குப் பின்வரும் முகவரியில் தொடர்புகொள்ளக் கோருகிறோம். பேராசிரியர் ஏ. சுப்ரமண்யம் எம். ஏ., ஸ்ரீராமகிருஷ்ண—விவேகானந்த மன்றம், கலவை சாலை, ஆர்க்காடு-632 503, வ. ஆ. மாவட்டம்.

ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் நிவாரணப் பணிகள்

□ ஒரிஸ்ஸா, ஆந்திரப்பிரதேசம், குஜராத், மேற்கு வங்காளம் ஆகிய இடங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு வீடுகளையும் பள்ளிக்கூடங்களையும் கட்டித்தரும் பணியை மிஷன் மேற்கொண்டு நடத்தி வருகிறது.

□ பங்களாதேஷ்: இங்கு மிஷனின் இரண்டு கிளைகளில் ஏழை எளியோருக்குத் துணிகள் விநியோகிக்கப்படுகின்றன. மூன்று கிளைகளில் பால் விநியோகிக்கப்படுகிறது. ஆறு கிளைகளின் மூலம் இலவச மருத்துவ உதவி வழங்கப்பட்டு வருகிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

'எழுமின், விழிமின், குறிசாரும் வரை நில்லாது செல்மின்!'

தொகுதி 61

ரௌத்திரி ஸூ தை முதல் துர்மதி மார்கழி முடிய

1981

ஆசிரியர் : சுவாமி தன்மயானந்தர்

துணை ஆசிரியர் : சுவாமி கமலாத்மானந்தர்

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்

ஸ்ரீராமகிருஷ்ண மடம் மயிலாப்பூர்

16, ராமகிருஷ்ண மடம் ரோடு சென்னை—600 004

பொருளடக்கம்

(அகர வரிசை)

Ramakrishna Mission Sevashrama
Vijnanananda Marg, Muthiganj
ALLAHABAD 211003

Phone: 53856

November, 7, 1981

ARDHA KUMBHA MELA CAMP 1982

AN APPEAL

Dear Friend,

The famous Ardha Kumbha Mela will be held at Prayag on the Triveni sands from 9th January to 9th February, 1982. Lakhs of pilgrims and Sadhus are expected to come to this Mela from all parts of India and abroad. Because of the Somavati Amavasya which falls once in hundreds of years, bigger rush is expected in this Ardha Kumbha. Special arrangements have to be made for the medical care of Sadhus and pilgrims. The Ramakrishna Mission Sevashrama will, as usual, open a camp on the Mela ground with Charitable Allopathic and Homoeopathic clinics and First-aid centre for the purpose of free medical treatment and attention to the assembled pilgrims and sadhus. Qualified Doctors, Compounders and Volunteers will be necessary to conduct the work. Provision for stay of about 400 devotees and 100 sadhus and volunteers also has to be made. It is also proposed to maintain a Mandir and Satsang Pandal for regular Satsang programmes in the camp. The approximate cost will be about Rs. 1,00,000/-. The Sevashrama, therefore, earnestly appeals to the generous public to help the Sevashrama in this noble humanitarian cause as they did spontaneously in the past. Contributions in cash or kind will be thankfully received and acknowledged by the following :—

The Secretary, Ramakrishna Mission Sevashrama,
Muthiganj, Allahabad-211003.

Cheques and Drafts should be crossed and drawn in favour of 'Ramakrishna Mission Sevashrama, Allahabad' and sent by registered post only.

With best wishes and Namaskar,

Yours in the service of the Lord,
Swami Tattwabodhananda
Secretary

Note: Further details may be obtained from the Secretary, Ramakrishna Mission Sevashrama, Allahabad-211003.

Donations to the Ramakrishna Mission Sevashrama are exempted from Income-tax under Section 80G of the Income Tax Act, 1961 vide I.T. Case No. 1101—RQ—2125 CAL/TC (C)